
# சிரித்திரன்



மகுடியைப் படியுங்கள்

கே: பணக்கார உறவினர் வீட்டிற்கு ஏழையாகிய யான் போகலாமா?

ப: ஜாக்கிரதை! அங்கு தங்கச்சங்கிலி களவு போனாலும் உன்னைத் தான் சந்தேகப்படுவர்கள்... நாய்ச்சங்கிலி களவு போனாலும் உனைத்தான சந்தேகப்படுவர்கள்.

- என் மகனுக்குக் கல்யாணம் கசக்குது. துறவியாகப் போகிறானாம்!
- சில மினித் தியேட்டர்களில் கவர்ச்சியான படங்கள் ஓடுகிறதாம்.... அதுகளை அவன் பார்க்க வழி செய்!
- அதுகளைப் பார்த்துத்தானே இந்த வெறுப்பு.

ஜூலை 1985

விலை ரூபா 3-25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

If you have decided upon a Travel

Please dial 01 223 6032

Jana Enterprises will make your Journey a Joy for Ever

For your Business in London also Contact

## Jana Enterprises Ltd

பிரயாணம் செய்யப்போகிறீர்களா? சௌந்தர்யமான, சௌகர்யமான சூழ்நிலையில் உங்கள் பிரயாணதிற்கு சகல ஒழுங்குகளும் செய்து தருபவர்கள்.

## ஜனு என்டர் பிறைசெஸ் லிமிடெட்

இங்கிலாந்தில் வர்த்தகம் செய்யவும் தொடர்பு கொள்ளுங்கள்

JANA ENTERPRISES LTD.
Travel & Commission Agents

38, WROUGHTON ROAD,
LONDON S. W. 11 - B G.
U. K.

Phone: 01 223 6032

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்

நகை 22 சுவை 2 ஆடி 85

# ஆணிவேராகிய அடிநிலை மக்கள்

நாம் அலங்கார மேடைப் பேச்சின் ''அனல்கக்' குகளில் நீண்டகாலம் மயங்கி இருந்து விட்டோம். அந்த மயக்கத்திலிருந்து எழுந்து கண்ணை அகலவிரித்துப் பார்த்தால் - எல்லாம் சூனியம்.

மேடையில் ஆடியவர்கள் கவிதை — விடியு மென்றிருந்தோம். மேடையில் [illegible] பேச்சாளர் [illegible] — [illegible] நம்பியிருந் திருந்தோம். [illegible] — [illegible] மலர்ச்சி எனக் காத்திருந்தோம். எல்லாம் காலப்போக்கில் கனவாய், கற்பனையாய் மறைந்து விட்டன.

எமது சமூகத்தில் இன்று மேடைப் பேச்சாளர்களில், பெரு தலைவர்களில், பணக்காரர் [illegible] அன்னிய நாடுகளில் [illegible] சுவாசம் செய்து கொண்டிருக்கிறார்கள் எமது டாக்டர்களும், எஞ்சினியர்களும் அன்னிய நாட்டவரின் [illegible] பொருளாதாரத்திற்கு ஆங்கே 'காம்ப்' அடித்திருக்கிறார்கள். எமது செல்வச்சீமான்கள் [illegible] விரும்பி குறுகிய நாடுகளில் போய்க் குடியிருக்கின்றார்கள். இந்த நாட்டின் ஜீவநாடியாக இருப்பது விவசாயமும் கைத்தொழிலுமாகும் [illegible].


இன்று எமது நாடு கொடும் புயலால் பாதிக்கப்பட்ட மரம்போல் காட்சியளிக்கிறது. பேரலைப் புயலுக்குப் பயந்து [illegible] போல் [illegible] மக்கள் அன்னிய நாடு பறந்துபோய் விட்டார்கள். அப்படிப் புயலில் அகப்பட்டபோது அடிநிலை மக்கள் நிலைகுலைந்து நிற்கிறார்கள்.

ஆணிவேராக அமைய [illegible] அடிநிலை மக்கள் [illegible] மண்ணையே [illegible] இருக்கின்றனர்.

அந்நிலையில் [illegible] குறிப்பிடத்தக்க அச்சம், பயம், நாணம், [illegible] என்ற விரக்தி ஏற்படுகிறது; அன்னிய நாட்டுக் கலாச்சாரத்தின் மோகத்தால் ஏற்படுகிறது. இறுதியில் அன்னிய நாட்டின் கலாசாரத்தைத்தான் [illegible] பழகிக் கொள்கின்றனர்.

இந் நாட்டின் அடிநிலை மக்களை [illegible], [illegible] காக்கும் [illegible] தெய்வங்கள். [illegible] தாய்மொழியைப் பேசி [illegible] கலாச்சாரத்தை [illegible] வாழும் மக்களே இந் நாட்டின் அரண். பிரச்சினைகளிலிருந்து விலகி நிற்காது பிரச்சினைக்குள் [illegible] அடிநிலை மக்களே எமது [illegible] அட்டியில்லை.

[illegible] பறந்து [illegible] நிற்கும் [illegible] மக்கள். [illegible] மண்ணில் [illegible] உழைப்பவரே [illegible]





Mrs டார்: டார்லிங்

Mr டார்: யேஸ் டார்லிங்

Mrs டார்: "கண்ணாடி வாழ்க்கை" [illegible] [illegible]

Mr டார்: [illegible] தான் மிஸ்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



● சி. கணேசமூர்த்தி, தொண்டமனாறு.

கே: காக்கா பிடிப்பவனுக்கும் காக்கா பிடியாதவனுக்கு முள்ள வித்தியாசம் என்ன?

ப: காக்கா பிடிப்பவன் மனைவி 22 கரட் தங்கத்தில் செய்த நகை அணிவாள் காக்கா பிடியாதவன் மனைவி காக்கா பொன் மாலை அணிவாள்.

ஃ ஃ

● சி. குமாரசாமி, மானிப்பாய்

கே; தீண்டவரும் பாம்பை அடிப்பது பாவமெனும் மனோபாவம் கொண்டவன் எவனாக இருக்கலாம்.

ப; குறவன்.

ஃ ஃ

● க. சிவன், புத்தூர்

கே; கலைஞன் மக்களிடம் பணம் சுரண்டுவதை மனதில் கொண்டு கலை படைத்தால்?

ப; கலையில் வாணிபப்பாணி சிந்தும்.

ஃ ஃ

● சிவபாலன், பரந்தன்.

கே: தியாகத்தால் பாலைவனத்தைச் சோலைவனமாக்க முடியுமா?

ப: குருமணலும் குருதியில் நனைந்தால் குருத்து வைக்கும்.

ஃ ஃ

● முத்தையா, மாத்தளை.

கே: பொடிபோடும் பழக்கத்தை என்னால் நிறுத்த முடியவில்லையே!

ப: பொடிடப்பாவும் மனிதன் சுடலைப் பொடியாகும் வரை அவன் மடியில் இருக்கும்;

ஃ ஃ

● சி; நாகநாதன், பரந்தன்.

கே; எவன் மந்தையில் ஒருவன்

ப: பகல் முழுக்க உறங்கி விட்டு உழைத்து வரும் மனைவிக்கு உதைப்பவன்.

ஃ ஃ

● செல்வி நீலாம்பிகை முத்துராசா, பரந்தன்.

கே; தொழிலாளிக்கு மோட்சத்தில் இடமுண்டு என்கிறேன்;

ப; ஓம்... கிணறு வெட்டுபவனுக்குந்தான் புண்ணியம் சேரும் தண்ணீர் பந்தல் போடுபவனுக்கல்ல.

ஃ ஃ

● ப. பரமநாதன் அச்சுவேலி.

கே; ஆண்டவனுக்கு எது தாழ்வாகத் தென்படுகிறது.

ப: ஊழல் பணத்தில் உயர்ந்த கோபுரம்

ஃ ஃ

● மு. வேல்சாமி, கண்டி.

கே. தலைமேல் கூரையின்றி வீதியில் வாழும் குழந்தைகள் தலைவிதி பற்றி உங்கள் கருத்து?

ப; தெருப்பிள்ளையார் தலைவிதி

ஃ ஃ

● நி. மூர்த்தி. பளை.

கே; நான் இந்த மண்ணின் கதாநாயகனாக என்ன செய்ய வேண்டும்;

ப: முதலில் மனிதனாக வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

ஃ ஃ

● ப. பத்மநாதன், வவுனியா.

கே: சிறந்த நடிகன் என்பதற்காக அவன் பாதணியையும் பூஜை செய்யலாமா ?

ப; கனி இனிமை யென்பதால் வேரையும் புசிக்கலாமா?

★ ★

● ம. மரியாம்பிள்ளை, நெல்லியடி.

கே; வாகனங்களின் வேகம் கட்டுப்படுத்தாவிடில்?

ப: இடுகாடு கனக்கும்.

★ ★

● சி, சிங்காரவேல் மட்டுநகர்

கே: அகிலத்தை ஆண்ட தமிழன் எப்போ ஆங்கிலேயன் கையில் சிறையானான்

ப: சிறையிருக்கும் கிளியை சாஸ்திரம் கேட்ட அன்று.

★ ★

● செல்வி மனோரஞ்சிதம் ராசையா, சங்கானை.

கே: கோவில் உண்டியல் அருகாமையில் ஏழை பிச்சைக்காரன் திருவோட்டுடன் இருந்தால் நீர் எதில் பணம் இடுவீர்.

ப: முதல் திருவோட்டில்... மீதியிருந்தால் உண்டியலில்

★ ★

● த. பரந்தாமன், கீரிமலை.

கே: சமாதானம் விரும்பும் சிறிய நாடுகள் அணுக்குண்டு குவிக்கும் வல்லரசின் நட்பை நாடலாமா?


ப: புறாக்குஞ்சு கரு நாகத்தின் அரவணைப்பில் குளிர் காய எண்ணலாமா.

★ ★

● செல்வி புஷ்பானந்தி பரமேஸ்வரன், நல்லூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கே: விஞ்ஞானியால் பக்தனாக வாழமுடியுமா?

ப: பற்றற்ற நிலையில் வாழமுடியாது. பற்று வரவுதானே அவர் வழமை.

★ ★

● சி. தயாளினி, தெல்லிப்பழை.

கே: மருதுபாரே நீ ஒரு மரம்.

ப: ஓம்... நானும் மரம் நீயும் மரம் உலகில் உள்ள எல்லோரும் மரங்கள் மரத்தின் கொள்கையின்றில், பலர் கண் கண்ணில் மனிதர்களின் கால்கள் மண்ணில் கற்பனை விண்ணில்.

□ □

● சி. ராஜநாதன் மானிப்பாய்

கே: நல்லது செய்ய எனக்கு நல்ல உள்ளமுண்டு, நான் என்ன செய்ய வேண்டும்

ப: உள்ளம் என்ற உளியால் உன்னை தெய்வமொன்று சிலையாய் வடித்தெடுக்க வேண்டும்.

□ □

● சி. மலையம், உடுப்பிட்டி.

கே: பணம் நரகத்தின் எஜமானரும் போதா?

ப: சைத்தான் மந்திரவேலைகளை கற்பிக்கப்படுவான்.

★ ★

● மு. சிவகுருநாதன், வேலணை

கே: மனிதன் இன்று என்ன செய்து கொண்டிருக்கின்றான்

ப: ஆத்மாவை விற்றுப் பணம் தேடிக் கொண்டிருக்கின்றான்

□ □

● ர. சங்கரப்பிள்ளை, வரணி.

கே: எமன் ஏன் உணர்வில்லா அறிவியல் வாதி?

ப: அடுத்த வேளை உணவு இல்லாதவனுக்கு அடுத்தவேளை தன் பற்றிப் பேசுபவன்.

□ □

● ஜெ. ஜெயபிரேசன், பருத்தித்துறை.

கே: பணக்கார உறவினர் வீட்டுக்கு ஏழையாகிய நான் போகலாமா?

ப: போகக்கூடாது அங்கு நாய்ச் சங்கிலி களவு போனாலும் உன்னைத்தான் சந்தேகப்படுவார்கள்... நாய்ச்சங்கிலி களவு போனாலும் உன்னைத் தான் சந்தேகப்படுவார்கள்.

□ □

● வ. குலசிங்கம், புத்தூர்.

கே: குடிப்பழக்கமும் சிகரட் புகைக்கும் பழக்கமும் ஒருவனுக்கு இருக்கலாமா?

ப: இரு பக்கமும் எரியும் மெழுகுதிரி விரைவில் உருகிவிடுமல்லவா.

□ □

● செல்வி நிரஞ்சனா சகாதேவன், யாழ்ப்பாணம்.

கே: ஏழைகளுக்கு எதிர்காலம் இருள் மயமானதா?

ப: நாங்களின் கவலையை பூரண ஏகாதிபனை என்றுவோர் அடுக்காயதை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

□ □

● ப. தனபாலசிங்கம், கொடிகாமம்.

கே: வைரத்திலும் வைரமானது எது?

ப: நல்லான முன்னோர்களின் கண்ணீர் முத்துக்கள்.

□ □

● ப. ஜெயகரன், யாழ்ப்பாணம்.

கே: மனிதன் ஆண்டவனிலும் பெரிய படைப்பாளியென்கிறேன்?

ப: ஆண்டவன் படைத்த கரும்பு அடிப்பக்கத்தில் இனிக்கும். மனிதன் படைத்த கற்கண்டு எப்பக்கத்திலும் இனிக்கும் ஆனால் மனிதன் படைத்த கற்கண்டு ஆண்டவன் படைத்த கரும்பில் தான் தயாரிக்கப்படுகிறது.

□ □

● சி. பாலகுலேந்திரன் கொக்குவில்

கே: யாழ்ப்பாணம் பற்றி நீர் நினைப்பதென்ன?

ப: நான் சிந்தித்து அழுது கொண்டிருப்பது யாழ்ப்பாண பட்டினத்தை ஆனால் விமானத்தில் பறந்து அந்நியநாடு போகக் கொண்டிருக்கின்றார்கள் அதே சமயம் யாழ்ப்பாணத்தின் அந்தஸ்து ஆண்டுக்கு ஆண்டு ஆகாயத்தில் உயரப் போகிறது.

□ □

● சி. குணவடிவேல் ஆவரங்கால்

கே: ஏழைக்கு எதிர்காலம் உண்டா?

ப: ஏழைக்கு இல்லை. பிறருக்கு உண்டு. ஏழைகளை மையமாக வைத்து இலக்கியம் படைத்து தமது பணப்பெட்டியை நிரப்பியிருக்கிறார்கள் எழுத்தாளர்கள். ஏழையை மையமாக வைத்து கட்சியின் பணப்பெட்டியை நிரப்பியிருக்கிறார்கள் அரசியல்வாதிகள். ஏழையை மையமாக வைத்து படம் தயாரித்து பணப்பெட்டியை நிரப்பியிருக்கிறார் படத் தயாரிப்பாளர். ஆனால் ஏழையின் பிச்சைப்பாத்திரம் இன்றும் காலியாகவே இருக்கிறது

★ ★

● வி. சிவானந்தஜோதி மாதகல்.

கே: கதாநாயகனில்லாத கதை எப்படியிருக்கும்?

ப: மணமகனில்லாத மணவறை போலிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'திரை அரங்கம்'

சசி. கி

✱ கடந்த 'திரை அரங்க'த்தில் அறிமுகமாகிய நஷருதீன் ஷாவிற்கு இவ்வாண்டு சிறந்த நடிகருக்கான இந்தியாவின் தேசியவிருது. கிடைத்துள்ளது. சிறந்த நடிகைக்கான விருதைப்பெற்றுக் கொண்டவர் ஸபானு அஸ்மி. ஹிந்தி திரையுலகில் விரல்விட்டு எண்ணக் கூடிய தரமான கலைஞர்களுள் இவரும் ஒருவர். அண்மையில் டெல்கியில் நடைபெற்ற பத்தாவது சர்வதேச திரைப்பட விழாவின் தேர்வுக்குழுவில் ஒருவராகக் கடமையாற்றிய ஸபானு அஸ்மி நடித்த 'ஆர்த்' என்ற வித்தியாசமான திரைப்படத்தை மகேஸபட (நெறிப்படுத்தியது) இங்கு வீடியோவில் பார்க்கின்ற சந்தர்ப்பம் பலருக்குக் கிடைத்திருக்கலாம்.

● பெண்கள் தயாரிக்கும் திரைப்படங்களை பிரபல்யப் படுத்துவதையும், அவற்றுக்கான விநியோக வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதையும் நோக்காகக் கொண்ட பெண்களது திரைப்பட விழா 1979 இலிருந்து நடைபெற்று வருகின்றது. இவ்வாண்டு பாரிஸில் நடைபெற்ற இத்திரைப்பட விழாவில் BILGE OLGAG என்ற துருக்கிய பெண் நெறியாளரது KA CIK DUSMANI (திருமண அறை) என்ற திரைப்படம் முதற்பரிசைப் பெற்றுக்கொண்டது. அரசியல் விசாரணை ஒன்றிற்கு உட்பட்டிருப்பதால் அவரால் நேரடியாகப் பரிசைப்பெற்றுச் செல்ல முடியாது போனதாம். இலக்கிய ஈடுபாடுங்கொண்ட OLGA திரைப்படத்துறைக்கு வருவதற்கு முன் நாவலாசிரியராக இருந்தவர்.

☐ இவ்வாண்டு சிறந்த நெறியாளருக்கான இந்திய தேசிய விருது அடூர் கோபாலகிருஷ்ணனுக்கு கிடைத்துள்ளது 'முகாம் முகம்' என்ற இவரது திரைப்படமே இவருக்கு இவ்விருதைப் பெற்றுக்கொடுத்தது. பத்தாவது சர்வதேச திரைப்படவிழாவிலும் இத்திரைப்படம் காட்டப்பட்டது ) மலையாளத் திரைப்படத்துறையில் வியாபார ரீதியில் தம்மை இழந்து விடாத ஒருசிலருள் இவரும் ஒருவர். 'சுயம்வரம்' 'கொடியேற்றம்' 'எலிப்பந்தயம்' என்பன இவர் நெறிப்படுத்திய மற்றைய திரைப்படங்களாகும். கேரளாவில் திரைப்படம் பற்றிய அறிவையும் ஆர்வத்தையும் கணிசமான அளவில் ஏற்படுத்திய 'சித்திரலேகா' என்ற திரைப்பட அமைப்பு இவரது முயற்சியினாலேயே ஆரம்பிக்கப்பட்டது. 'கதகளி' நடனக் கலைக்குடும்பத்திலிருந்து வந்த 'அடூர்' பூனா திரைப்படக்கல்லூரியில் நெறியாளராகப் பயிற்சிபெற்றவர். இவரது விவரணத் திரைப்படங்கள் பலவும் குறிப்பிடக்கூடியன.

☐ அண்மையில் டெல்கியில் நடைபெற்ற பத்தாவது சர்வதேச திரைப்படவிழாவின் தேர்வுக்குழுவில் ஸபானு அஸ்மியுடன் இடம் பெற்ற மற்றைய இந்தியக் கலைஞர் சௌமித்திரே சட்டர்ஜி. வங்காளத்தில் பிரபல நடிகரான இவர் பிரபல வங்காள நெறியர்ளர் சத்ஜித்ரேயின் — 'அபுர் சன்ஸார்' தொடக்கம் 'காரே பயரே' வரை - பன்னிரண்டு திரைப்படங்களில் நடித்துள்ளார். சத்ஜித் ரேயை உயர்வாக மதிக்கும் சௌமித்திரே அவரை வேறு இந்திய நெறியாளார்களுடன் ஒப்பிடுவது முட்டாள் தனமான முயற்சி என்று கூறுகின்றார் இவரைக் கௌரவிக்கும் வகையில் இவரது திரைப்படங்கள் பாரிஸில் அண்மையில் நடைபெறவுள்ளது. திரைப்படத்தைத் தவிர, நாடக இலக்கிய ஈடுபாடுங்கொண்ட இவரது நான்கு கவிதைத்தொகுதிகள் இது வரை வெளி வந்துள்ளனவாம்.

☐ பெரும் பாலும் வர்த்தக ரீதியான திரைப்படங்களை மக்களை இலகுவில் எட்டுவதனால் அவர்களுக்கு அவற்றையே 'கலை'யென்று மயங்குகின்றார்கள். ஆனால் உண்மையான கலையம்சம் பொருந்திய திரைப்படங்களை அவர்கள் பார்க்கின்ற சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலமும், நல்ல திரைப்படங்கள், திரைப்பட ரசனை ஆகியவற்றோடு தொடர்புள்ள அடிப்படை அறிவை அவர்களுக்குப் புகட்டுவதன் மூலமும் மக்களின் உள்ளார்ந்த ரசனையுணர்வை வளர்க்க முடியும் என்பதை பல நிகழ்ச்சிகள் காட்டுகின்றன. ஹெஹ்ஹொடு என்பது பங்களூரில் பின் தங்கியதொரு கிராமம். இங்கு வாழும் மக்கள் பெரும்பாலும் ஏழை விவசாய — தொழிலாளர்களே. சில காலத்துக்கு முன் இங்கு இவர்கள் என்றுமே கேட்டறியாத - ஆனால் உலகில் தலை சிறந்த — சத்ஜித்ரே, அகிராகுருசோவா, பேக்மன், ஃபெலனி, கோடாட், ஐஸென்ஸ்ரன், சார்ளி சப்ளின், ஆகியோர்களது உன்னத திரைப்படங்கள் காட்டப்பட்டன 'நிஜசம்' என்ற கலாச்சார அமைப்பின் பரீட்சார்த்த முயற்சியே இது. மிக எளிமையான, வாழ்வின் உண்மைத் தன்மைகளைப் பிரதி பலித்த இக்கலைப் படைப்புக்களை கால்நடையாகவும், மாட்டு வண்டிகளிலும் வந்து பார்த்த அக்கிராம மக்களுக்கு அவை புது அனுபவத்தைக் கொடுத்தனவாம். இவ்வாறு மேற்கு வங்காளத்திலும் ஒருமுறை மலைவாசிகள் கிராமமொன்றில் 'போர்க்கப்பல் பொட்டம கின்' (ஐஸ்ஸன்ரைன் 'பதர்பஞ்சாலி' (சத்ஜித்ரே) 'பிகாசோ' (குளுசாட்) போன்ற படங்கள் காட்டப்பட்டன. 'விரிந்த கண்களோடும், திறந்த வாயோடும்' அப்படங்களைப் பார்த்தனராம் அம்மலைவாழ் மக்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் ஆண்டுச் சிரித்திரனில் மலர்ந்த சிரிப்பில் சில...

முதல் பையன்: டேய் குழப்படி செய்தியோ கடவுளைக் கூப்பிட்டுப் போடுவன்.

இரண்டாவது பையன்: டேய் விறாக ஏன் கடவுளைக் கூப்பிடுறாய்? அவர் வந்து போக 'பெற்றோல்' செலவு நீ குடுக்கிறியோ?

(சிரி. ஆவ. 65)



கவிஞர்: உமக்குக் கவி எழுதத் தெரியாது. கவிக்குரிய சீர் தளை சொல்லத் தெரியாது.

விமர்சகன்: எனக்கு முட்டை இடத் தெரியாவிட்டாலும் பொரித்த முட்டையைப் பார்த்துப் பார்க்க [illegible] தெரியும்.

(சிரி. ஜன. 66)

மாப்பிள்ளை: இந்நாளில் எங்கப்பா ஊர் பஞ்சாயத்தி டாரும். தன் வீட்டுக்கு உபயோகமில்லாத எதையும் வைத்திருக்க மாட்டார். எனி யானையோ பிடித்து அவர்கள் தலையில் கட்டிவிடுவார்.

பெண்: எங்கிட்டும் விளங்குகிறது. என் தலையிலும் உங்களைக் கட்டிவைத்தவராச்சே!

மாப்பிள்ளை: ? ? ?

(சிரி. நவம். 65)

பத்திரிகையாசிரியர்: சார்! நீங்க எழுதின கதை பிரசுரிக்கத் தகுதி இல்லையே.

கதையாசிரியர்: அட என் கதை இல்லே சார் அது. உங்க கதையைக் காப்பியடிச்சேனே.

(சிரி. நவம். 65)

எறும்புகளின் தலைவன்: உன்னோடார் 'கியூ' வரிசையை விளக்கச் சொன்னது?

இல்லை எறும்பு: இந்தப் படித்த மனிதர் கியூ வரிசையின் ஒழுங்காகச் செல்லாத போது எங்களுக்கேன் இந்த ஒழுங்கு.

(சிரி. டிசம். 65)

ஆசிரியர்: சைவசமய நூல் ஒன்று சொல்லு, பார்ப்போம்.

மாணவன்: புலுராய், சேர்.

(சிரி. டிசம். 65)

திருடன்: எங்காவது பொலிஸ்காரனைக் கண்டாயா?

மனிதன்: இல்லையே!

திருடன்: அப்படியா? நல்லது உன் மணிப்பர்ஸையும் கைக்கடிகாரத்தையும் மரியாதையாகத் தந்துவிட்டுப்போ.


மனிதன்: ? ? ?

(சிரி. டிசம் 65)

"நம்மூரில் மயிரே இல்லாமல் மொட்டையாக ஒரு குழந்தை பிறந்திருக்கிறது" என்று செய்தி போட்டிருக்கிறார்கள்.

"தகப்பன் மொட்டைக் கடிதம் எழுதுவதில் கெட்டிக்காரர் போலும்"

(சிரி. டிசம். 65)



"சொல்லாது. இந்தக் காலப் பெண்களின் உடை_"

"என் அவளின் சமையலும் சொல்லாதுகாணோ"

(சிரி. ஜன. 66)

ஆசிரியர்: எழுத்தாணியால் எழுதப்பட்ட காலத்தில்தான் சிறந்த இலக்கியங்கள் உருவாகியிருக்கின்றன. அச்சுப்பொறி வந்ததற்குப் பிறகு சிறந்த இலக்கியங்கள் உருவாகவில்லை. இதற்குக் காரணம் என்ன?

மாணவன்: அச்சுப்பொறி வந்த பிறகு பேனாதான் வற்றிக்கொண்டிருந்த தமிழ் மணியின் ஊற்று வற்றியிருக்கவில்லை.

(சிரி. ஜன. 66)



"உன்னுடைய மனைவியின் நாஸ் திகளைந்து போனதால் வைத்தியர் குதிரை வாகனத்திலேயே விழுந்து கும்பிட்டாரே!"

"குதிரை வாகனத்தைக் கண்டவுடனே ரேஸ் குதிரை ஞாபகம் வந்திருக்கவேணும்"

(சிரி. மார்ச் 67)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனங் கூடலிலிருந்து ஓர் குரல்

சுவர்ண கேசரி.

எந்த விதமான ஆறுகளோ, மலைகளோ பெரும் காடுகளோ இல்லாத தட்டையான பூமித்தரையில், வளர்ந்தோங்கி நிற்கும் பனங்கூடல்களுக்கு மத்தியில். வளைந்து வளைந்து செல்லும் நெடுஞ்சாலைகளில், பழைய சோமசெற்றுக்காரும் ஏபோட்டியும் போட்டி போட்டுகொண்டு பவனி வரும் குடாநாடு தான் யாழ்ப்பாணம் என்று சிலர் நகைச்சுவையாகக் கூறுவதுண்டு இன்னும் சிலர் இவற்ருேடு றலி பைசிக்கிளும் சிங்கர் தையல் மெசினும் இன்னும் உயிர் வாழும் உன்னத பூமி என யாழ்ப்பாணத்தை வர்ணித்து யாழ்ப்பாணத்தின் பழமைபேணும் மரபுக்கு மகுடம் சூடி மகிழ்வதும் உண்டு.

## திருக்கல் வண்டில் ஓடிய மண்ணில்....


இன்று யாழ்ப்பாணத்தில் சோமசெற்காரும், ஏபோட்டியும் மட்டுமன்றி டக்சன், வாக்ஸ் வாகன், மொரிஸ் மைனர், டொயாட்டா போன்ற கார்களும் போட்டி போட்டுக் கொண்டு யாழ்ப்பாண வீதிகளை வலம் வருகின்றன. றலி பைசிக்கிள் இன்றும் யாழ்ப்பாண விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களை சந்தைப் படுத்தும் காவியாக இருக்கும் அதே வேளையில் ''ஏசியா பைக்'' இளம் சமுதாயத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றது.

கல்லூரிகளுக்கும் கல்விக் கூடங்களுக்கும் மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் சவாரி செய்யும் சாதனமாக — அத்தியாவசிய வாகனமாக இன்று துவிச்சக்கரவண்டி மாறி விட்டது. பைசிக்கிள் இல்லாத யாழ்ப்பாணத்தை இன்று கற்பனை செய்து கூட பார்க்கவே முடியாது.

''வடக்கன் மாடு'' பூட்டிய வண்டில்களில் எடுத்துச் செல்லப்பட்ட பொருட்களை எல்லாம் ஏற்றி இறக்க இன்று ''லாண்ட் மாஸ்டர்கள்'' தயாராக இருக்கின்றன. அன்று தட்டி வான்களில் செய்யப்பட்ட பிரயாணம் இன்று மட்டுப்படுத்தப் பட்டுள்ளது. தட்டிவானை அளவெட்டி தொடக்கம் வசாவிளான் ஊடாக அச்சுவேலி - பருத்தித்துறை பாதைகளில் தான் இன்று பெரும் பாலும் காணலாம். அன்று தட்டி வானும் இ. போ. ச. பஸ்களும் எடுத்த இடத்தை இன்று மினிபஸ்கள் எடுத்துக் கொண்டு விட்டன. மானைக்கண்டு துரத்தும் வேடனைப் போல இ. போ. ச. பஸ்களைக்கண்டு துரத்தும் மினிபஸ் பிரயாணம் இருக்கிறதே! அது மெய் மறக்கக் கூடியதல்ல. மெய் சிலிர்க்கக் கூடியதாக இன்று மாறிவிட்டது.

## திரைப்படங்கள் ஓடிய கொட்டகைகளில்..

''இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற்பொருட்டே'' என்ற வள்ளுவர் வாக்கிற் கொப்ப விருந்தோம்பலில் சர்வதேசப் புகழ்பெற்ற யாழ்ப்பாண மக்களுக்கு பொழுது போக்கு என்ருல் முன்பு தென்னிந்திய திரை விருந்துகளேயாகும். ஒரு கால கட்டத்தில் யாழ்ப்பாணத்தில் மிகச் சிறந்த பொழுது போக்குக் கூடங்களாக திரைப்பட மாளிகைகள் மிளிர்ந்தன. நான்கு வேளை பூசைகள் ஆலயங்கள் சிலவற்றில் இடம் பெருமல் இருப்பதுண்டு ஆனால் யாழ்ப்பாணத் திரைப்பட மாளிகைகளில் நான்கு காட்சிகளும் ''ஹவுஸ்புல்'' காட்சிகளாக ஓடிக் கொண்டே இருக்கும், தென்னிந்தியாவில் தோல்வி கண்ட 'மசாலா' படங்களும் 'மாமூல்' படங்களும் ஜனத்திரள் நிறைந்த காட்சிகளோடு நூறு நாட்களைக்



● ஒருநாளும் ஒருவரையும் குறைகூறக் கூடாது. ஒருகாலத்தில் அவன் திருந்துவான்.

□ ! ! !

● ஆமா என் நண்பன் ஒருவர் மஞ்சள் பத்திரிகை ஆசிரியராக இருந்தார். இப்போ மஞ்சள் உடை உடுத்தி துறவியாகிவிட்டார்.

— அதிமதுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்து வெற்றி வாகை சூடி வெள்ளி விழாக் கொண்டாடிய துண்டு, இந்த யாழ்ப்பாணத்து மண்ணில்;

திரைப்படம் திரையிடப்பட்டு முதல் நாள் முதல் காட்சியின் போது தமது அபிமான நட்சத்திரங்களின் படச்சுருள் பெட்டியைப் பெரு மக்கள் நல்லூர் கந்தன் ஆலயத்தில் வைத்து அபிஷேகம் அர்ச்சனை செய்வித்து, தீப ஆராதனை காட்டி ஊர்வலமாக எடுத்து வர அவ்வாறு வருபவர்களுக்கு மட்டும் 'டிக்கட்' கொடுக்கப்பட்டு ஏதும் காட்டி கோலாகலமாக அந்த நாட்களில் ஆரம்பமானது. தமது அபிமான நட்சத்திரங்கள் திரையில் தோன்றும்போது விசிறிகளின் விசிலடிசத்தம் திரைப்பட அரங்குகள் கிளைபரப்பட்ட காலம் முன்பு இருந்தது. இன்றோ நிலைமை முற்றாக மாறிவிட்டது. அந்த சினிமா அபிமானி இன்று வீட்டுத் திண்ணைகளில் தான் திரைப்பட அரங்குகளில் காணமுடிகின்றது. வெளிநாட்டுத் தொடர்களால் தொலைக்காட்சிப் பெட்டிகளும் டெக்குகளும் வீடியோ கசற்றுகளும் பெருமளவில் வந்து குவியத்தொடங்கியதோடு வீடியோ கொப்பிகளை விநியோகம் செய்யும் நிறுவனங்கள் மூலைக்குமூலை திறக்கப்பட்டமையால் புத்தம்புது திரைப்படங்களை "சுடச்சுட" பார்க்கும் அரிய வாய்ப்பு ரசிகப் பெருமக்களுக்கு கிட்டியதோடு மறுபுறத்தில் திரைப்பட இறக்குமதியை அரச திரைப்படக் கூட்டுத்தாபனம் பொறுப்பேற்றுக் கொண்டதோடு திரையரங்குகளில் திரைவிருந்துகள் முற்றாகவே அற்றுப்போய் விட்டன. இன்று "கொப்பி" என்ற சொல் குறிப்பது பாடசாலைக் கொப்பிகளை அல்ல; வீடியோக் கொப்பிகளைத்தான் குறிக்கிறது. மாணவர்கள்கூட தமது திருக்கரங்களில் இன்று "கொப்பிகளை" ஏந்தியவாறு செல்லும் காட்சி சர்வ சாதாரண காட்சியாகி விட்டது.

## நாதஸ்வர ஓசை ஒலிந்த மண்ணில்...

யாழ்ப்பாணத்தில் இப்போது கோயில் திருவிழாக்கள் ஆரம்பமாகியுள்ளது. ஆனால் முன்னைய கோலாகலமோ குதூகலமோ போட்டித் திருவிழாக்களோ இப்போது கிடையாது. முன்பு "திருவிழாக்காலம்" எமது பாரம்பரிய கர்நாடக இசைக் கலைஞர்களுக்கு "வசந்தகாலம்" என்பார்கள். பொருளாதாரரீதியான வாய்ப்புக்கள் அவர்களுக்கு அதிகம். ஆனால் பாரம்பரிய இசைக்கலைக்கு தொண்டுசெய்யும் எமது கலைஞர்களது வாழ்க்கை நலன் இன்று வருமானம் பெரிதும் இன்றி பாதிக்கப்பட்டு இருக்கிறது. "நாத விந்துக்கள் ஆதி மோகனமோ" என அருணகிரிநாதர் இசையைப் போற்றினார். ஒரு இனத்தின் ஆத்மாவாக இருப்பது இசையே. இப்போது இசைக் கலைஞர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு எமது இனம் தனது ஆத்மாவை இழக்கும் ஆபத்தான நிலைக்கு எம்மை இட்டுச்சென்று கொண்டிருப்பதையும் இக்கட்டத்தில் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

தொடர் அடுத்த இதழில்...

## ஓய்வு

ஒரு நாள் மீனவனொருவன் மீன் பிடித்துக் கொண்டிருந்தான், மீன்பிடிப்பதை விட்டு விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தான்.

இவனது செயல்களைக் கவனித்துக் கொண்டு அவ்வழியே வந்த ஒரு ஆங்கிலேயக் கனவான், மீனவனைப் பார்த்து "ஏனப்பா மீன்பிடிப்பதை நிறுத்தி விட்டுத் தூக்கத்தில் ஆழ்ந்துள்ளாய்?" என்று கேட்டார்;

"இன்றைக்குப் போதுமான மீன் பிடித்து விட்டேன். அதனால் தூங்குகிறேன்" என்றான் மீனவன்.

"இன்னும் அதிகமாகப் பிடித்தால் நிறையப் பணம் சேர்க்கலாமே" என்றான் கனவான்,


"பணம் சேர்த்து என்ன செய்யலாம் என்று கேட்டான் மீனவன்.

"நல்ல வீடு கட்டி கார் வாங்கிச் சுகமாக வாழலாமே" என்றார் கனவான்!

"இன்னும் அதிகமாகப் பிடித்தால் என்ன செய்யலாம்?" என்று மீனவன் கேட்டான்.

மீந்து வரும் பணத்தை வங்கியிலிட்டு விட்டு வீட்டில் ஓய்வாகத் தூங்கலாமே என்றார் கனவான்.

"அதைத்தானே நான் இப்போது செய்கிறேன்" என்றான் மீனவன்.



□ உங்க மது அனுபவத்தைக் கொஞ்சம் சொல்லுங்க அண்ணாச்சி;


★ அதுவா!

போதையின் உச்சநிலையில் சொர்க்கத்தைக் காண்கிறேன்; போதை தெளியும்போது இரண்டு சொர்க்கத்தைக் காண்கிறேன். போதை கலைந்த பின்பு நரகத்தைக் காண்கிறேன்;

அதிமதுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## முக்கிய குறிப்பு

நாளுக்கு நாள் ஏராளமான விண்ணப்பங்கள் வருகின்றன. அத்துடன் ஒருமுறை பிரசுரித்த பின்னும் மீண்டும், மீண்டும் விண்ணப்பிக்கிறார்கள். ஒரு சிலர் பல்வேறு விலாசமிட்டு அனுப்புகிறார்கள் இதனால் ஒரு சிலரது விண்ணப்பமே மீண்டும்மீண்டும் பிரசுரிக்கப்படுகிறது. இதனால் இதனைக் கட்டுப்படுத்தும் முகமாக 5 ரூபா முத்திரை இணைத்து அனுப்பும் விண்ணப்பமே பிரசுரிக்கப்படும்.

A. மகேந்திரன் 25
அட்டன் நஷனல் வங்கி
மன்னார்
ஊழியர்
T. V. வானொலி, கதைப் புத்தகம் படித்தல்.

N. Ratnaneshn 26
16/1 Dickmans Road
Colombo - 5
Senior Technical Assistant (Elctro-ic)
Drum வாசித்தல், நீச்சல்.

M. S. Samson 12
182, 1st Cross Street,
Colombo - 11.
Business.
T. V. Radio, Stamp Collecting.

எம். லெட்சுமணன் 21
இல. 19 பரடைஸ் பிலேஸ்
கொழும்பு - 12
பேரட்புரடாக்ஸ்
செல்விழனி எண்ணெய் தயாரிப்பாளர்

K. S. சந்திரகுமார் 23
4ம் ஒழுங்கை, கச்சாய்றோட்
சாவகச்சேரி.
மாணவன்
நாணயங்கள் சேகரித்தல்
தபால் தலை சேகரித்தல்,
T. V. வானொலி, நாவல்'
சிறுகதை. பத்திரிகை வாசித்தல்.

மூ. ஆறுமுகம் நந்தினி, 19
இல; 218 காலி வீதி.
வெள்ளவத்தை.
படிப்பு) மாணவி
பேனு நண்பர் தொடர்பு
தையல், கதை புத்தகம்
நாணயம் ஆகியன.



உங்கள் புகைப்படங்களுக்கு
**பேபி போட்டோ**
**படப்பிடிப்பாளர்**
**திருநெல்வேலி.**

## சிரித்திரன் பேனு நண்பர் கழகம்

பெயர்: ..........................................................................

விலாசம் ..........................................................................

தொழில் .................................... வயது ................................

பொழுது போக்கு: ..........................................................................

இத்துடன் ரூ 5/- முத்திரை இணைத்துள்ளேன்

கையொப்பம் ........................................ திகதி ....................

காலேஜ் மாணவர் முதல் ரீனேஜ் பாவையர் வரை
பல்லுள்ள பாப்பா முதல் பல்லில்லா தாத்தா வரை
எல்லோர்க்கும் இன்பம் தருவது

**அண்ணு டொபிகள்**

❋ அண்ணு டொபி ❋ அண்ணு பட்டர் கொச்
❋ அண்ணு பார்லி சுகர் ❋ லொலி பொப்ஸ்
❋ பெப்பர் மிண்ட்

இதே போன்ற
**அண்ணு தயாரிப்புகளை நாடுங்கள்**

**அண்ணு தொழிலகம்**
**இணுவில்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌலானா சௌக்கத் அலி
# மௌலானா முஹம்மத் அலி
# சகோதரர்கள்

— ர. ஜுனைதா —

இந்தியாவின் அரசாட்சியை ஆக்கிரமித்து வியாபார நோக்குடன் ஊன்றியிருந்து காலனி ஆட்சி செலுத்த வந்த ஆங்கில ஆட்சியாளரை விரட்டியடிப்பதற்காக கிளர்ந்தெழுந்த ஆயிரக்கணக்கான போர் வீரர்களின் பட்டியலில் மௌலானா சௌக்கத் அலி மௌலானா முஹம்மத் அலி சகோதரர்கள் மிகவும் பிரபல்யமானவர்கள். லோகமான்ய பாலகங்காதர திலகர், பண்டித மதன் மோகன் மாளவியா, சர்தார் வல்லபாய் படேல், பண்டித மோதிலால் நேரு, ராஜன் பாபு, மகாத்மா காந்தி மற்றும் பல தேச பக்தர்களின் அணியில் தோளோடு தோள் நின்று தங்கள் உடல், பொருள், ஆவி அத்தனையையும் பாரத அன்னையின் பலிபீடத்தில் அர்ப்பணித்த தியாகச் செம்மல்கள் இவர்கள்.

அலி சகோதரர்களின் தாயார் ராணி திருமதி ஆபிதா பேகம் அம்மையாரின் இரண்டாயிரக்காரக் காளையருக்குப் பிறந்தவர்களே சௌக்கத் அலி, முஹம்மத் அலி சகோதரர்கள். பாரத சுதந்திரப் போராட்டம் உச்சக் கட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் அலி சகோதரர்கள் இலங்கைக்கு வந்திருந்தார்கள். கூட அவர்களது அன்னை ஆபிதா பேகமும் வந்தார்கள். அப்போது இலங்கையின் பிரதான பட்டணங்களில் ஒன்றான புத்தளம் நகரில் அவர்களுக்கு ஒரு பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. அப்பொழுது அங்கு குழுமியிருந்த பிரமாண்டமான கூட்டத்தில் அந்த பாண்டியிலே மாதர்களும் பேசினார்கள். அவர் என்ன பேசினார்? இதோ கேளுங்கள்!

"எனது முதற் கணவர் இறந்ததும் நான் மறு விவாகம் செய்துகொண்டது எதற்காகத் தெரியுமா? என் தாய்த்திருநாட்டின் அடிமைவிலங்குகளைத் தகர்த்தெறிந்து அவளை விடுதலை செய்வதற்காக இந்த இரண்டு வீரச் சிங்கங்களை ஈன்றெடுப்பதற்காகவே என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள், எங்கள் மூதாதையர்களின் வீரத்தையும், ஒழுக்கசீலத்தையும், உயர் பண்புகளையும் தாய்ப் பாலின் மூலமாக அவர்களுக்கு ஊட்டியுள்ளேன்", என உணர்ச்சிவசப்பட்டுப் பேசினார். அந்தப் பேச்சு [illegible] ஒளியின் பிரகாசம்போலாக வெளிப்பட்டு அங்கு கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களின் இதயங்களில் பதிந்து அவர்களது நெஞ்சங்களை விடுதலைச் செய்தது. சுவாசிப்பை பெருக்கிறுள் தெரிய வைத்தது.


அக்காலத்தில் இந்தியாவிற்குச் சுயாட்சி வழங்குவதற்காக ஆங்கிலேயர்கள் நடாத்திய ஆங்கில துரைத்தனத்தாரால் வட்ட மேசை மகாநாடொன்று லண்டனில் நடைபெறவிருந்தது. அம்மகாநாட்டுக்கு காங்கிரஸ் பாரதத் தலைவர்களும் அழைக்கப்பட்டார்கள். அலி சகோதரர்களும் அதற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். லண்டன் புறப்படுவதற்காக பம்பாய்த் துறைமுகத்தில் அவர்கள் கப்பல் ஏறினார்கள். அத்தருணம் அவர்களை வழியனுப்ப வந்திருந்த லட்சோபலட்சம் மக்களுக்கு முன் இளைய சகோதரரான மௌலானா முஹம்மத் அலி ஒரு கடும் சபதம் செய்தார். "என் தாய் நாட்டை அடிமைத்தளையிலிருந்து சுயாட்சி பெறாமல் இந்த மண்ணில் காலடி எடுத்துவைக்க மாட்டேன்" என்று குமுறினார்.

எதிர்பார்த்ததைப் போல வட்ட மேசை மகாநாடு ஒரு வெறுங் கூத்தாகவே முடிந்தது.

(10ம் பக்கம் பார்க்க)

கதைக் குறுணி

## வசதியீனம்



ஈழத்திலிருந்து சட்டமிட்ட வாழ்த்துப் பத்திரமொன்று வாசிக்கப்பட்டு அந்த அந்நிய நாட்டுக் கவிஞன் கௌரவிக்கப்பட்டான். பாராட்டுக் கூட்டமும் கவிஞனின் நன்றியுரையுடன் இனிது நிறைவேறியது.

ஆண்டி உடையுடன் ஒருவன் தான் சிகரட் அட்டையில் எழுதிய வாழ்த்துக் கவிதையை அந்த அந்நிய நாட்டுக் கவிஞனுக்குப் பணிவன்புடன் கொடுத்தான். அவன் சிகரெட் அட்டையில் எழுதியிருந்த கவிதையைப் படித்துப் பரவசமடைந்தவராய், ஆச்சரியக் கவிஞனை அரவணைத்து நலம் விசாரித்தார்.

"என் ஆத்மாவில் கவிதை உண்டு. அதை அச்சுக்குத் தர என் பையில் பணம் இல்லை" எனக் கூறி முடித்தான் அந்த ஆண்டி.

— சுமாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'டொனேஷன்' என்ற சீரழிவு

**தயாளன்**

இன்று எமது சமூகத்தில் சீதனக் கொடுமை தாங்க முடியவில்லை என்று பலரும் சொல்கிறார்கள். அவர்கள்! தவறாக சீதனம் என்பது டொனேஷனையும் உள்ளடக்கியது என்று கருதுகிறார்கள்.

உண்மையில் சீதனம் என்பது பெற்றோர் தமது மகள்மாருக்கு செய்யும் சீர்வரிசையாகும், இது வீடு, வளவு, நகை முதலியவையாகும். இங்கு பெற்றோர் தமது சொத்தை தமது மகளுக்குத்தான் கொடுக்கிறார்கள், இதனால் அவர்களுக்குப் பெரிய பாதிப்பு எதுவும் ஏற்படாது. டொனேஷன் என்பது அப்படியல்ல. அதில் பெற்றோர் தமது பணத்தை மணமகனின் பெற்றோருக்குத் தாரை வார்க்கின்றனர். இது மிகவும் கொடுமையானது.

சீதனம் என்பது எமது சமூகத்தில் நெடுங்காலமாக இருந்த பாரம்பரியம். ஆனால் டொனேஷனே மேற்கு நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டதாகும்

மணமகனின் பெற்றோர் அல்லது மணமகனின் மிக நெருங்கிய உறவினர் இந்த டொனேசனால் லாபமடைகின்றனர். சீதனத்தினால் அவர்கள் எந்த லாபமும் அடைவதில்லை. ஆதலால் அவர்கள் டொனேஷனை லாபகர நோக்குடன் கூட்டிக் கேட்பார்கள். சீதனத்தைப்பற்றி அவர்கள் அதிகம் நாட்டம்கொள்வதில்லை. கலியாணங்கள் நிறைவேறத் தடையாய் இருப்பது முழுக்க முழுக்க இந்த டொனேசன்தான். சீதனத்தினால் எவ்வித தடையும் வருவதில்லை.

இந்தக் கொடுமை மிக்க டொனேசன் எங்கிருந்து வந்தது ஏன் வந்தது என்பதை ஆராய்ந்தால் பலஉண்மைகள் புலப்படும்.

எமது தமிழ் சமுதாயம் நல்லதொரு சீரான வாழ்க்கை முறையைப் பின்பற்றி வந்தது. ஆனால் ஐரோப்பிய ஆட்சியின் போது உத்தியோகம் புருஷ லட்சணம் என்ற கருத்து அடிமை வாழ்வில் இருந்த அனைவரிடமும் மேலோங்கி நின்றது. இந்த உத்தியோகம் என்பது ஐரோப்பிய ஆட்சியாளருக்கு அடிமைச் சேவகம் செய்வதையே குறித்தது. அன்றும் இன்றும் அடிமை வாழ்வில் இருக்கும் நாம் உத்தியோக மாப்பிளைகளையே விரும்பினோம். அப்போது இங்கிலாந்தில் கலியாணங்களின் போது தலைவிரித்தாடிய டொனேசன் என்ற வியாதி எம்மையும் பற்றிக் கொண்டது. இங்கிலாந்தில் டொனேசனால் பல வழக்குகள் நீதிமன்றத்தில் இடம்பெற்றது. Twedd!e V Atkinson என்றோர் வழக்கு 1961 ஆம் ஆண்டிலேயே இடம்பெற்றது.

சிகரட் புகைத்தலும் ஒரு மேல் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பழக்கம். அது போன்று டொனேசன் வாங்குகின்ற பழக்கமும் இறக்குமதி செய்யப்பட்டது. புகைத்தல் எமது ஆரோக்கியத்தை அழிப்பது போல் டொனேசன் வாங்கும் பழக்கமும் எமது சமுதாயத்தின் ஆரோக்கியத்தை அழித்துக் கொண்டிருக்கிறது.

---

## மௌலானா . . . : .

(9ம் பக்கத் தொடர்ச்சி)

அது பிசுபிசுத்து விட்டது. பிரிட்டிஷாரின் ஒரு ராஜதந்திர நாடகம் என்றே அதைச் சொல்ல வேண்டும். தலைவர்கள் யாவரும் ஏமாற்றத்துடன் தாயகம் திரும்பினார்கள் — ஒருவரைத் தவிர! அவர் யார்? அவர்தான் சுதந்திரம் பெறாமல் தன் தாய்நாட்டின் மண்ணில் அடியெடுத்து வைக்கமாட்டேன் எனச் சூழுரைத்தாரே — அந்த மாமனிதரான மௌலானா முஹம்மதலியே தான்!

மத்தியதரைக் கடலில் கப்பல் வந்துகொண்டிருக்கும்போது திடீரென மௌலானாவுக்கு மார்படைப்பு ஏற்பட்டது. யா அல்லாஹ்! அவ்வளவுதான். இறையடி சேர்ந்து விட்டார். இன்னா லில்லாஹி! அவரது ஜனஸா பாலஸ்தீன மண்ணில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

---

வங்கி மனேஜர்: என்ன கிளிச் சாத்திரியார் பெருந்தொகை லோன் கேட்கிறீர்கள்?

கிளிச்சாத்திரக்காரன்: காலத்திற்கேற்ப தொழில் செய்யலாம் என்று பார்க்கிறேன். கிளிக்குப் பதிலாய் ஒரு கொம்பியூட்டரை வைத்து சாத்திரம் சொல்லலாம்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து வாசனைத் திரவியம்

மடப்பந்திக் காலைமுறைகழ்ந்து மண்ணிலே
சப்பாத்திறுன்றும் கரியாய் விளையாது.
ஏர், எருது, காளை இழுக்காது. எனினும் அந்தப்
பாறை பிளந்து பயன்விளைப்பான் எங்கவரான்

— 'சிலைமுடி கொடி நிறம் பிறிக்கு'
என்ற கவிதையில் மகாகவி,

□ □

பார்த்ததும், துவண்டு மேனி
படபடக்கிட, போலெல்லாம்
வேர்த்தது; வேர்த்த போர்த்
விறைத்தது; விறைப்பு நெஞ்சை
தாக்கியது; மயங்கி போனான்.
நொடியிலே நொடிந்து கண்கள்
பார்த்ததே பார்த்த பாவிடு
பாவை கல்லாகி விட்டாள்.

— பண்ணகவியின் 'அகலிகை'
என்ற கவிதையிலிருந்து.

□ □

அந்திபட்டும் இருளாய் ஆட்சியினிக் கட்டளைப்
ஆகும் அங்கே
இந்தவரை நீங்காசிகள் எல்லமெயாள் மட்டுமல்லே
இருப்பான் யங்கி
சொந்தமென்ன கண்டோம்பயம் இவ்வளையாய் கொடிய
நோயைப் போக்க
விந்தையுறு தமிழாய் விதியென்று பேசுவோம்
வீடு செல்வோம்.

— நீலவாணனின் 'இன்று வணக்கும்
சம்பளமா?' என்ற கவிதையிலிருந்து

□ □

'புத்' என்று நரகத்தின் இன்னாறா மனிதனுக்கு நம்பிக்கை இல்லை. பிள்ளை இல்லாதவர்களுக்கென்றே ஒரு தனி நரகம் என்றால் நரகத்தின் அதிபதி எமனே அவன், நரகத்தின் பெரும் பகுதியையே இந்தப் பாவிகளுக்கென்று பிரத்தியேகமாக ஒதுக்கி வைக்க வேண்டுமே, இந்த வகையைச் சேர்ந்தவர்களின் தொகை எண்ணில் அடங்காதே. ஆயிரமாயிரமாக நோன்புகள் நோற்கிறார்கள்; தான தருமங்கள் செய்கிறார்கள்; வைத்தியர்களிடம் ஆலோசனை கேட்டு மருந்து உண்கிறார்கள். கத்தி வெட்டுச் சிகிச்சையும் செய்து கொள்கிறார்கள், செயற்கை வழிகளில் கருவேற்ற முயலுகிறார்கள்... எல்லாம் தம் சந்ததி அழிந்து படாமல் இருப்பதற்காக!

என்ன வேதனை! சந்ததி அழிந்து போனால் ஏதோ பெரும் இழப்பு விளைந்து விடப் போகிறது என்று நினைப்பதற்கு. ஒரு தனி மனிதன் இந்தப் பிரபஞ்சத்தினை அகன்று படைப்புத் தொடரில் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவனா?

— இலங்கையர்கோனின் 'அநாதை'
என்ற சிறுகதையிலிருந்து,

## ஸ்ரீராகம்

எனது தந்தையார் மரண படுக்கையில் இருந்து நாடக வாசிப்பு போராடிக் கொண்டிருந்த நேரம், டாக்டர் கொடுக்கவிட்டார்; இன்றும் இரு ரத்தி நான்கு மணித்தியாலம் உயிர் தப்பாது என்று.

கூட இருந்த ஒருவர் சொன்னார்: இந்தக் கடைசி நேரத்தில் ஏதாவது ஸ்ரீராகத்தை பாடு.

நான் வயலினை எடுத்தும் சக்தி மிக்க ஸ்ரீ ராக மாகிய பைரவி ராகத்தை மீட்டத் தொடங்கினேன் சுமார் பத்து நிமிடம் வயலின் வாசித்த பின் ஓய்ந்திருந்தேன், என் தந்தையின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகத் தொடங்கியது.

வயலினை வைத்துவிட்டு டாக்டரிடம் ஓடிப்போய் நிகழ்ந்ததைச் சொன்னேன்.

''உன் அப்பா பிழைத்துவிட்டார். இனிப் பயமில்லை'' என்றார் டாக்டர்.

(குன்னக்குடி வைத்திய நாதனின் இந்திய வானொலிப் பேட்டியிலிருந்து.)



ஒருவர்: நீர் சொர்க்கத்திற்குப் போகவா நரகத்திற்குப் போகவா விரும்புகிறீர்?

லட்சியவாதி: நரகத்திற்குப் போகவே விரும்புகிறேன்.

ஒருவர்: ஏன்?

லட்சியவாதி: நான் நரகவாசிகளின் விடுதலைக்காகப் போராடுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவி: சேர் என்னாலே படிக்கமுடியவில்லை, அவன் குமார் வகுப்பில் என்னைப் பார்த்தபடியே இருக்கிறான்.

பிரின்ஸிப்பல்: உனக்கெப்படித் தெரியும் அவன் உன்னைப் பார்க்கிறான் என்று

மாணவி: நான் அவனைப் பார்த்தனான்,

★ ★

ஒருவர்; மூடை மூடையாக வியாபாரம் செய்வதால் கதிரையை விட்டு எழும்ப நேரம் இல்லாத நீங்கள் இப்போ எழும்பி நிற்கிறீர்களே

முதலாளி: இப்போ மூடை நம்மிடம் இல்லை மூட்டை தான் கதிரையில் ஏராளமாக இருக்கிறது

—இ. தயாளன்

● ●

- பஞ்சாங்கங்களுக்கிடையில் திதிகள் வேறுபடுகின்றனவே?
- கொம்பியூட்டர் வந்துவிட்டது; இனி அந்தப் பிரச்சினை இருக்காது.

## மறக்க முடியாத முறுவல்



● என்னங்க... புதுமையான தாலிக்கொடியாய் இருக்கு?

● ஆமாங்க... ஒன்று ஸ்டேசன் மாஸ்டருக்குச் செய்தது; மற்றது டாக்டருக்கு;

# சிரித்திரு

எமது ரயிலில் Bath Room அருகில் இருந்த இருக்கையில் ஆங்கிலக் கனவான்கள் பிரயாணம் செய்தனர்.

உள்ளூர் ரயில் பிரயாணி: நீங்கள் இப்பிரயாணத்தில் பல காட்சிகளைக் கண்டீர்களா?

ஆங்கிலக் கனவான்கள்: Yes, we have seen a lot and smelt a lot. (ஓம் நாங்கள் நிறையப் பார்த்தும் இருக்கிறோம்' நிறைய மணத்தும் இருக்கிறோம்.)

● ●

ஒருவர்: நீ ஏன் மற்றவர்களின் பொருளைத் தீண்டுகிறாய்?

திருடன்: மகாத்மா காந்தி தீண்டாமை கூடாது என உபதேசம் செய்திருக்கிறார். அதனால் தான் தீண்டுகிறேன்.

● ●

மேல் நாட்டில் பிரபல சட்டத்தரணி ஒருவர் சாதாரண உடையில் ரயிலில் பயணம் செய்தார். ரயிலில் இவர் இருந்த கொம்பாட்மெண்டில் வேறு யாரும் இருக்கவில்லை. அப்பொழுது மூன்று பெண்கள் வந்து அவரிடம்

''எம்மிடம் உங்கள் பேர்ஸைத் தாருங்கள். இல்லாவிட்டால் நீங்கள் எம்மைப் பலாத்காரம் செய்ய முற்பட்டதாக கூக்குரலிடுவோம்'' என்றார்கள்.

சட்டத்தரணியோ தனக்குக் காது கேளாது. நீங்கள் சொல்வதை எழுதித் தாருங்கள் என்று சைகை மூலம் அவர்களுக்கு விளக்கினார்.

அவர்களும் அவர் கேட்டபடி எழுதிக் கொடுத்தனர். பின்னர் சட்டத்தரணி

''நீங்கள் கூக்குரலிடுங்கள். நான் பேர்ஸைத் தரமாட்டேன். ஆட்கள் வந்து விசாரித்தால் நீங்கள் எழுதித் தந்ததைக் காட்டுவேன்'' என்றார்.

பெண்கள் திருதிருவென விழித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டிபுலக் கிணறு

ச. பத்மநாதன்

மாலை ஏழு மணி வரையில் முடித்துச் சமையல் அறைக்குள் வந்து நீதிபதிகள் வரை செல்வ போய்த் விட்டு ஹோட்டலுக்குள் வந்து சோபாவில் அமர்ந்த சிவ நேசர் அன்றைய தினசரியைக் கையில் எடுத்துக் கொண்டார்.

அவரை எதிர்பார்த்துக் கொண்டிருந்த மயூரன் அவர் சோபாவில் அமர்ந்ததும் அருகில் வந்து சொன்னான்.

"அப்பா உங்களைத் தேடி அபி விருத்திச்சபைத் தொழில் நுட்ப உத்தியோகத்தர் வந்து விட்டுப் போனவர்."

பத்திரிகையைக் கீழே மடித்துக் கொண்டு கேட்டார் சிவநேசர்:

'என்ன விஷயமா வந்தவர்'

"இந்தத் திட்டிபுலத்திலே பிரதேசசபைக்குச் சொந்தமான கிணறு ஒன்று இருக்கிறதாகச் சபைக் கோவைகளில் பதி வேட்டிலே பதியப்பட்டிருக்குதாம் ஆனால் அந்தக் கிணறு இருக்கிற இடம் தெரியாதாம். மொத்தமாகச் சபைக்குச் சொந்தமான இருபது கிணறுகளில் பன்னிரண்டு கிணறுகள் இருக்கிற இடங்கள் மட்டுந்தானும் தெரியுமாம். மற்ற எட்டுக் கிணறுகள் இருக்கின்ற இடங்களை அடையாளங்கண்டு அறிவிக்கச் சொல்லி மேலிடத்திலிருந்து அறிவித்தல் வந்திருக்குதாம். ஏங்கள் குறிச்சி பிரதேசசபை அங்கத்தவராக இருந்ததாலே இந்தத் திட்டிபுலக் கிணற்றைப் பற்றி உங்களுக்குத் தெரியக்கூடுமென்று விசாரிக்கத்தான் அவர் வந்தார்."

சிவநேசர் பதில் ஏதும் சொல்லாமல் மீண்டும் பத்திரிகையிலேயே மூழ்கினார். சில நிமிடங்களின் பின் தலையை நிமிர்த்தியபோது மயூரன் தன்னையே ஆவலுடன் பார்த்துக் கொண்டிருப்பதை அவர் கண்டார்.

தெரிந்த தகவல்களை அவனுக்குச் சொல்லிவிடவே விரும்பினார். "நான் மெம்பராக இருந்தது ஐம்பதாம் ஆண்டு வரையிலும்தான். அப்ப இந்தத் திட்டிபுலம் முழுக்க ஆளே இல்லாத வெட்டி திட்டிபுலத்திலே முதலாகக் கிணறு வெட்டுவிச்ச ஐம்பது பாப்புக் காணி இருந்திருக்கு குடியேறினது நான்தான். அது ஐம்பத்தொன்றிலே. அதுக்குப் பிறகு மனைகளெல்லாம் விழுந்து தோட்டங்களுமாகப் பெருகி எழுபதிலே திட்டிபுலம் மட்டுமல்ல, பிறகு ஒரு வட்டாரமா வந்திட்டுது."

"அப்பா... நான் கேட்டது திட்டிபுலக் கிணற்றைப் பற்றி" மயூரனின் குரலில் பொறுமையின்மை தெரிந்தது.

"அதைப்பற்றித்தான் சொல்லப்போறன்"

ஏதோ யோசித்துத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டு பின்னும் தொடர்ந்தார் சிவநேசர்.

"அப்ப பெரிசா இப்போது போல இடத்திலே புதிசாகக் கிணறு ஏதும் வெட்ட வேணுமெண்டால் கிராமச் சபைக்கு ஒரு பெட்டிசன் கொடுக்க வேணும். அதுக்குப் பிறகு சபையிலே ஒரு தீர்மானம் நிறைவேற்றிக் காசு ஒதுக்கிக் கிணறு வெட்டுவினம். அப்படி வெட்டின கிண

றுகளில் விவரமான இடங்கள்.

"அப்ப அந்தக் கிணறுகள் இருக்கிற இடம் எப்படித் தெரியாமல் போகும்?" அவசரத்துடன் கேட்டான் மயூரன்.

சில சமயத்திலே காணி நன்கொடை தாறதாக ஒரு காணிச் சொந்தக்காரர் சபைக்குக் கொடுத்தாலும் அந்த வயலுக்கு சபை தீர்மானம் நிறைவேற்றும். அது கடிதம் கொடுக்கிறவரைக்கும் சென்றடையும் பொறுப்பு. பிறகு காணி கையளிக்கப்பட்டு காசில் வெட்டப்பட்டு விடும். அந்தக் கொடுப்பனவு 'பாஸ்' பண்ணப்பட்ட பிறகு இரண்டு மூன்று வருஷங்கள் வரை அந்தக் கிணறு தொடர்பான கோவைகள் சபையிலே இருக்கும். பிறகு காணாமல் போய் விடும்.

மயூரனுக்கு இந்தச் செய்தி அதிர்ச்சியாக இருந்தது. அவன் உணர்ச்சி வசப்பட்டுச் சொன்னான்.

"இது பெரிய அநியாயம். பொதுச் சொத்தை இப்படி அலட்சியப் படுத்தலாமா?"

மயூரனின் வார்த்தைகள் சிவநேசரை எங்கேயோ தாக்கியிருக்க வேண்டும். அவரின் குரல் கொஞ்சம் கூடவே ஒலித்தது. அவர் பொறுமையை இழந்து விட்டதை வெளிப்படுத்தியது.

"காசைத் தண்ணி மாதிரிச் செலவு செய்து பொதுமக்களை அவசரத்தோடு வசதிகள் தந்தனுப் பும் பதிவுகளை சேர்க்கவேணும் என்று நினைக்கிறது அநியாயமா என்று சொல்லமாட்டாது. நான் அப்ப கிணறு வெட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிவு இசைக்கு
## றேடியோஸ்பதி

* பரவசமூட்டும் பக்திப் பாடல்கள்
* தித்திப்பான திரை இசைப் பாடல்கள்
* கர்நாடக மேதைகளின் கர்ணாமிர்தம்
* தனித்தேன் பாடல்கள்

அத்தனை அமுத வெள்ளத்தையும்
அள்ளிப் பருக

வருக வருக றேடியோஸ்பதி
பதிவு நிலையத்துக்கு

*அனைத்தையும் நவீன எலெக்ரோனிக் கருவிகள் மூலம் துல்லியமாக ஒலிப்பதிவு செய்து தருவதிலும், றேடியோ, ரேப் றெக்கோடர் தொலைக்காட்சிப் பெட்டிகள் அனைத்தையும் திருத்தம் செய்வதிலும், விற்பனை செய்வதிலும் முன்னணியில் திகழ்பவர்கள்.*

# றேடியோஸ்பதி

**கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

---

படித்தவர்கள் பாராட்டுகிறார்கள்
வளர்க! என வாழ்த்துகிறார்கள்.

மல்ரி சேவிசஸ்

தாபனத்தாரின்

# அஞ்சல் வழி ஆங்கிலம்

கல்விச் சேவை மூலம்
வீட்டில் இருந்தபடியே மிக இலகுவாக ஆங்கிலம் கற்கலாம்.

விபரங்களுக்கு;
மல்ரி சேவிசஸ்,
37 (351) மணிக்கூட்டு வீதி.
(வெலிங்டன் தியேட்டர் சந்தி)
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 22762


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இட்டிபுலக் கிணறு

(13ம் பக்கத் தொடர்ச்சி)

னனிநிறைத்துப் பாதுகாப்புடைய நான் ஒரு மணிநேரக் குலைவெடுக்கிறேன். இல்லாட்டிக் கல்வித் திட்டமுறையினை உடையடைய சகோதரியை நல்ல இடத்தில் வாழ்க்கைப் படுத்தியுமில்லை, நீங்கள் படிக்கவாறதில்லை...... அப்படி நடக்காதிருந்தால் நாங்கள் இப்ப பிள்ளைதான் எடுத்துக் கொண்டிருக்க வேணும்.''

''அப்போ நான் கேட்டன கிராமசபைக் கிணற்றைப் பற்றி நீங்கள் ஏன் அதுக்கு அப்படிச் சொல்லுகிறீர்கள்.....''

தன்னைச் சமாளிப்படுத்திக் கொள்ளச் கேலிதாபாருக்கு இரண்டொரு நிமிடங்கள் பிடித்தன? பின்னர் தணிந்த குரலில் அவர் சொன்னார்:

''அந்தக் இட்டிபுலக் கிராமசபைக் கிணறுதான் என்னுடையது.''

★

## ஜனாதிபதிக்கு நிகரானவன் உழவன்

அமெரிக்காவின் ட்ரூமன் ஜனாதிபதி ஆனதும் அவரது தாயாரைச் சந்தித்து ஒரு பிரமுகர் பாராட்டினார்.

''நீங்கள் உங்கள் மகனைக் குறித்துப் பெருமைப்படவில்லையா?'' என்றார்.

உடனே அந்த பெருமையிக்க தாய் என்ன சொன்னார் தெரியுமா?

''உண்மைதான், அதே அளவுக்கு எனது வயலில் உழுது கொண்டிருக்கும் எனது இரண்டாவது மகனைக் குறித்தும் பெருமைப்படுகின்றேன்!'' என்றார்.

— தந்தை

## —சிரித்திரன் பற்றி மித்திரன்—

ஈழத்துத் தமிழ் வாசகர்கள் யாவரும் வாசிக்க வேண்டிய சிரிப்பு இதழ் சிரித்திரன்.


சிரித்திரனின் ஒவ்வொரு பக்கங்களும் சிரித்துப் படிக்க வேண்டிய பக்கங்கள் சிந்தித்துப் பார்க்கச் செய்யும் பக்கங்கள்.

சித்திரங்கள் சொல்லுகின்ற இலக்கிய உண்மைகளை நடை, அரசியல் சமூகத்தையும் கேலிச்சித்திரங்கள் வாயிலாக என்று நிலைக்கவைத்து கூறுகிறது.

மகுடி பதில்களும் நகைச்சுவைத் துணுக்குகளும் சிரித்திரன் அம்சங்கள். இந்த இதழ் மகுடியின் ஒரு பதிலைப் பாருங்கள்.


கேள்வி: பொழுதுபோக்கு என்கிறார்களே அது என்ன?

பதில்: உழைக்காத விவசாயியின் பொழுது போகாது. தொழிலாளி பசியில் பொழுது போகாது. அடிமை வாழ்வில் பொழுது போகாது. ஏழைகளுக்கு அரசியல்வாதியின் பொழுது போக்கு. இப்படிப்பல



கணவர்: சமூகத்தில் மதிப்பிழக்காமல் இருக்கவேண்டும்: நீ வேலை விட்டு நாங்கள் நாக்கைக் கட்டிப் போகலாம்.

மனைவி: பேர்வழி: நாவலிக்காதல் நூல் பேர்வழிகளாக் திரைப் படிவதால் அந்த இடத்திருக்கலாம், ஆனால் பொட்டுச்சந்தில் நானே வைத்து பிரியமான இடம் கிடைக்கும்.



''தம்பி என்றுடைய மகத்தில் கேட்டுத்தான் நீ போட்டுச் சம் போகலாம்.

மனைவி: ஏன் கணவர் நரக லோகத்துக்குத்தான் போகவிருக்கிறார். நான் அங்குதான் போகவிருக்கிறேன்.

□ □ □

எதிர்பாராத சமயம் வெளியார்கள் வரும்போது வீடு எப்படி, எந்நிலையில் இருக்கிறதோ அதுதான் அந்த வீட்டின் உண்மையான சுகாதாரம்.

— கவி

கவலையுடைய குடும்பத்தை எவ்வளவு மனக்கெட்டுவிட முடியுமோ அவனே மகான்.

— காசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சிரிகதை

# நல்ல கதைதான் ....

கல்யாணி

அது ஒரு கையெழுத்துச் சஞ்சிகை வெளியீட்டு அறிமுகவிழா எங்கள் ஊர் கிராம முன்னேற்றச் சங்க நிர்வாகிகள் ஏற்பாடு செய்திருந்தனர். நானும் சென்றிருந்தேன்.

"தம்பி நீங்களும் வந்திருக்கிறீர்கள் போலிருக்கிறது.

குரல் கேட்டுத் திரும்பினேன். எங்கள் பகுதி கிராம சேவை அலுவலர். எந்த ஒருநிகழ்ச்சியிலும் அவர் கலந்துகொள்வார். நான் மௌனமாகச் சிரித்துவிட்டு கதிரையில் அமர்ந்தேன்

விழா ஆரம்பமாகவில்லை.

"தம்பி இப்ப உம்முடைய கதைகளை பேப்பரிலை நான் கன நாளாகக் காணவில்லை... இப்ப எழுதுவதை விட்டாச்சோ......

கிராம சேவை அலுவலர் பேச்சைத் தொடர்ந்தார்.

"உண்மைதான். நான் அநேக நாட்களாக எழுதவில்லை... இனி இப்ப உள்ள சூழ்நிலையில் எழுதுவதற்கு உற்சாகமில்லை......"

நான் பதிலிறுத்தேன்.

"அது சா இந்த விழாவுக்குத் தலைமை வகிப்பவர் யார்?", நான் கேட்டேன்:

"அது இப்ப புதிதாய் வந்திருக்கும் இன்சினியராம்; எனக்கும் ஆளைத் தெரியாது" அவர் கூறினர்,

வாசலில் வைக்கப்பட்டிருந்த கரும்பலகையில் நிகழ்ச்சி பற்றி எழுதியிருந்தார்கள். தலைமை வகிப்பவரின் பெயர் உருத்திர சிங்கம் என இருந்தது. எனக்குத் தெரிந்த பெயராகவும் இருந்தது.

விழா ஆரம்பமானது. பிரதம விருந்தாளி வாசலிலிருந்து மாலை அணிவிக்கப்பட்டு உள்ளே அழைத்து வரப்பட்டார். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. நான் நினைத்தது சரியாகவே இருந்தது. இந்த உருத்திரசிங்கம் எனக்குத் தெரிந்தவர் தான். ஆனல் எனக்குள்ளே ஒரே ஆச்சரியம். இலக்கியம் என்றால் என்ன விலை என்று கேட்கும் இந்த மனுசன்......

கொழும்பில் நான் கட்டிட இலாகாவில் வேலை பார்த்த சமயம் இந்த உருத்திரசிங்கமும் எங்கள் இலாகாவிலேயே ஒரு கட்டிட மேற்பார்வையாளராக பணியாற்றினர். வேலையில் நிபுணர் என்று பெயரெடுத்தவர்.

எனது மேசையடியில் வந்து என்னுடன் கதைத்துக் கொண்டிருப்பார்

"என்னப்பா எந்த நேரமும் உனக்கு கதைப் புத்தகம்தான் உதிலை என்னதான் படிக்கிறாயோ எனக்கு விளங்கவில்லை!"



ஒருவர்' என்ன உங்கள் எழுத்தாளராகிய கணவர் கருவாடாகிப் போனர்?

பெண்: அவர் கருவுக்கு வாடி கருவாடாகி விட்டார்.

— அதிமதுரம்

'நீங்கள் வேணுமென்றால் கொண்டுபோய் வாசித்துவிட்டு திருப்பித் தாருங்கோவன்" நான் புத்தகத்தை நீட்டினேன். "சீ,சீ, எனக்கு வேண்டாம்; உதுகளிலை என்ன கிடக்கு வாசிக்க......"

அவர் போய் விடுவார்.

ஒரு நாள் நான் இருக்கும் இடத்திற்கு ஏதோ அலுவலாய் என்னை தேடி வந்து கதைத்துக்கொண்டிருந்தார், எனது மேசையில் கல்கி, ஆனந்தவிகடன், குமுதம் போன்ற சஞ்சிகைகள் கிடந்தன. அவற்றையே பார்த்துக் கொண்டு இருந்தார்.

எழும்பிச் சென்று ஒவ்வொன்றாகப் புரட்டிப்பார்த்தார்.

"நீயடாப்பா இந்தப் புத்தகங்களுக்கு கனக்கச் செலவழிக்கிறாய் போலை கிடக்கு......!

என்னைப் பார்த்துக் கூறினர்.

நான் சிரித்தபடி அமர்ந்தேன்.

"கல்கி...... குமுதம்......... விகடன்......... நல்ல நல்ல பெயரப்பா! இவன்கள் உதுகளிலை ஆட்கள் வலு கெட்டிக்காரர். இனி இதுகளிலை நல்ல நல்ல கட்டுரைகளும் வருகுது என்ன?"

இஞ்சை பாரன்; வம்புப் படங்களும் அவையின்ரை கதைகளும்......"

விமர்சனம் தொடர்ந்தது.

"இதென்ன மாதப் புத்தகங்களோ கிழமைப் புத்தகங்களோ?

"ஒவ்வொரு கிழமையும் வாற சஞ்சிகைகள்."

நான் கூறினேன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உன்னை சம்பளத்துக்கு
ஆசிரியராகிக் காக இருக்கும்
போதும் போதா கிடக்கு?''

என்னைப் பார்த்து அவர்
வியப்புடன் விரித்தபடியே கேட்
டார்.

''அவ்வளவு செலவு இல்லை''
என அடக்கமான விடையில்
சந்திரிகை வந்த நேரம் அது.

''இப்ப இதிலை எழுதுற என்
பது பக்கம் போலை கிடக்கு
கொடுக்கிற காசுக்கு பிறையிலையே
அப்ப நீ மாதத்திலை வருகிறபடி
பழம் பேப்பர், புத்தகம் நிறை
யமாச் சேர்ப்பாய்போலை கிடக்கு''

நான் அதற்கும் ஒன்றும்
பேசாமல் இருந்தேன்.

''வீட்டை நம்முடைய
மாமா இப்படி ஏதாவது பள்ளிக்
கூடத்திலை இருந்து கொண்டு
வருவார். நான் மனுசிக்காரி குரு
கல், வீட்டை என்று இனைக்
கிடை வாசிப்பாள்; நான் அதுக
ளிலை செலவிட மாட்டேன்.''

மறுபடியும் பக்கங்களைப்
புரட்டினார்.

''இவங்கள் இந்தியாக்காரர்
எழு கெட்டிக்காரர்; கதை, கட்
டுரை என்று எழுதுவாய் இருப்பி
ருங்கள் என்ன!''

''இதென்ன புதுசாய் ஒன்று
கிடக்கு!'' என மேசை மேல்
கிடந்த வேறொரு சஞ்சிகையை
எடுத்துப் புரட்டினார்.

''அது யாழ்ப்பாணத்திலை அச்
சாக்கிறார்கள்'' நான் கூறினேன்.

''நீயும் கதை தான்...... இப்
ப யாரும் புத்தகம் அடிக்கிறான்
களோ......? என்னடாப்பா இந்தி
யாப் புத்தகம் மாதிரி வராது
என்ன?''

''நீங்கள் இந்த வெளியா
கும் சஞ்சிகைகளை ஒரு முறையா
வது படிக்கவில்லையா?'' நான்
கேட்டேன்.

''உதைப் படிச்சே பார்க்க
வேணும்! பார்த்துத் தெரியும்
தானே......''

''சரி நான் வாறன், நீ புத்
தகங்களை வாசி''

அவர் போய்விட்டார்.

அவரது இலக்கிய ஆர்வமும்
அறிவும் எனக்கு நன்றாகப் புரிந்
தது.

அதன்பின் அவர் எந்த பதவி
உயர்வு பெற்று திருகோணமலைப்
பக்கம் மாற்றலாகிப் போய்விட்
டார். நானும் அவரை மறந்து
விட்டேன். இப்படி இலக்கிய
விசயத்தில் மாறுபட்ட கொள்கை

கொண்டிருந்த மனுஷன் இன்று
சஞ்சிகை வெளியீட்டு விழாவுக்
குத் தலைமை வகிப்பது............
எனக்கு ஆச்சரியமாகவில்லை.

கருத்துரைகள் ஆரம்பிக்க
வெற்றி விழாவை ஆரம்பித்தார்.
அவரது உரை ஆரம்பமாயிற்று.

''அன்பார்ந்தவர்களே........
இன் வாசகர்களுக்கும் பின் கனவா
ன்களே பெரியோர்களே..... நான்
இந்த விழாவில்........ விழாவுக்கு
இலக்கிய நிகழ்ச்சிக்கு......''

அதற்குப் பின் சொல்லக
வாரில்லை. பலரின் மனம் எழுந்த
தாமரையாய் தனது சட்டைப்பையில்
இருந்து ஒரு கடதாசியை எடுத்து
வாசிக்கத் தொடங்கினார்.

''அன்பான ரசிகப் பெருமக்
களே......

''என்னை இந்த மாபெரும்
இலக்கிய விழாவுக்கு தலைமை
தாங்கும் சந்தர்ப்பத்தை அளித்த
.........'' என்றவுடன் இதற்கு மேல்
இருக்கமுடியாமல் நான் எழுந்து
பேசாமல் வெளியே வந்து விட்
டேன்.

அந்தக் காலத்தில் சஞ்
சிகை வரை வேண்டும் என நான்
வாழ்த்திக்கொண்டே நடந்தேன்.

# யாழ்ப்பாணத்தவனே! உன்னைத்தான்-..

(உண்மைச்
சம்பவம்)

அந்தத் திருமணச் சடங்கில்
இடம்பெறுமாக இருந்த ஒரு நிகழ்
ச்சியே அரசியல் 'கருத்துப் பரி
மாற்றம்' நடந்து கொண்டிருந்
தது. கருத்துப் பரிமாற்றம் என்
பதைவிட அரசியல் விமர்சனம்
என்று சொல்லுவதுதான் இன்
னும் பொருத்தமாக இருக்கும் என்று
நம்புகிறேன்.

அந்தக் குழுவில் வயது
போனவர்களும், நடுத்தர வயதி
னரும் இருந்தனர். ஆனால் நானும்
அதற்குள் ஒருவனாய் நிற்கத்தானும்
தான் அவர்களுடைய பேச்சை
நன்கு உணர முடிந்தது.

அரசியல் பற்றிய பேச்சு
வார்த்தையின் உச்சக்கட்டத்தில்

ஒரு எழுபத்தைந்து வயது மதிக்
கத்தக்க பெரியவர் ஒருவர்
தனது சென்னிறக் கம்பளம் போல
நீண்டு அடர்ந்திருந்த தாடியைத்
தடவியவாறே சொன்னார்: ''எங்
களை யாழ்ப்பாணத்தான் என்

## சிவா பொன்னுத்துரை

யாழ்ப்பாணத்தவர்களுக்கு என்
னுடன் தங்கை தன்னை மதித்
ததுதான் யாரோ தான் கொண்டி
ருக்கிறான். அதுதான் எங்களுக்கு
இவ்வளவு சிறுமை.''

இதில் கவனிக்கத்தக்கது என்ன
வென்றால் சொன்ன அவருங்கூட
ஒரு யாழ்ப்பாணத்தான் தான்,

அவருடைய குடும்பம் இப்போது
சிறுப்பிட்டி முகத்தான் வாழ்ந்து
கொண்டிருக்கிறது. ஆனால் அதற்
குக்காரணம் அவர் அரசாங்கத்தி
லே உத்தியோகத்தராக இருந்து இப்போது
ஓய்வு பெற்று எடுத்துக் கொண்டி
ருக்கும் பென்ஷன் அல்ல. அவர்

---

ஆசிரியர்: விருதைச் செய்து
தொடர்ந்து உயர்ந்த ஆணி
அணிந்துதான் கொடுக்
கட்டுக வேண்டும்,

சிறுவன்: வெள்ளைச் சேர்ட்டு
எச்சமிடுவதற்கு தகிலிருந்து
நிற்கும் போது நான் மட்
டுமா ஆசையுடன் ஆக
வும் செல்ல வேண்டும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடோடிக் கதை

# ஜென்மம்

என். கே. ரகுநாதன்

முன்ஞெரு காலத்திலே அழகாபுரி என்னும் நாட்டை வில்லவராஜசிம்மன் என்னும் சிற்றரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவன் அதிகார வெறி பிடித்தவன்; கொடுங்கோலன்; தீய குணங்கள் நிரம்பப் பெற்றவன். தன்னுடைய சுகபோக வாழ்வுக்காக, மக்கள் மீது பெரும் வரிகளைச் சுமத்தி, அவர்களைத் துன்பத்துக்குள்ளாக்கிஞன். பெண்களைத் தன் இச்சைக்குப் பலியாக்கிஞன். தனது தீயசெயல்களைக் கண்டு மனம் சுளித்த பெரியோர்களைப்பழிவாங்கிஞன். தன் ஆட்சியைக் குறை கூறுபவர்களைச் சிறையில் அடைத்துச் சித்திரவதை செய்தான்.

அவன் மனம் ஓர் இருட்குகை. சந்தேகத்தால் அவன் உள்ளம் நிரம்பி வழிந்தது. எந்த நேரமும் எவர் மீதும் சந்தேகம்தான்! அவன் என்ன சொன்ஞன்? இவன் என்ன நினைக்கிருன்? அவர்கள் என்ன செய்கிருர்கள்? என்பதே அவனுடைய சிந்தனை! நல்லவர்கள் மீதும் சந்தேகம்; கெட்டவர்கள் மீதும் சந்தேகம். அதனால் அமைச்சர்களையும் அதிகாரிகளையும் அடிக்கடி அழைத்து, நாட்டின் முன்னேற்றத்தைப்பற்றி ஆலோசிப்பதற்குப் பதிலாக, தன்னைப் பற்றியும் தனது ஆட்சியைப் பற்றியும் மற்றவர்கள் என்ன நினைக்கிருர்கள் என்பதைப் பற்றியே விசாரித்தான். தன்னையும் தனது ஆட்சியையும் குறை கூறுபவர்களை அடக்கி ஒடுக்குவது பற்றியே ஆலோசித்தான்.

அமைச்சர்களும், அதிகாரிகளும் அவனுடைய நடவடிக்கைகளை மெச்ச வேண்டும்; அவனையே புகழ்ந்து பேச வேண்டும்; அவனுடைய செயல்களுக்கு உடந்தையாக இருக்க வேண்டும்! மொத்தத்தில், அவர்கள், தத்தமது பதவிகளுக்குரிய கடமைகளைக் கைவிட்டு, மன்னனுக்கு ஒற்றர் வேலை பார்ப்பதிலேயே காலத்தைச் செலவிட்டார்கள். இதஞல் நாடு முழுதும் ஒற்றர்கள், ஒற்றர்கள், ஒற்றர்கள்! மனிதர்களுக்கு மட்டுமல்ல, பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் மண்ணுக்கும் மரத்துக்கும் வேலிக்கும் சுவருக்கும் காதுகள், காதுகள், காதுகள்!

உழவர்கள் வயலில் இறங்கி வேலை செய்ய சலிப்படைந்தார்கள். தொழிலாளர்கள் உடல் வருந்தி உழைக்க மனம் கசந்தார்கள். பாடுபட்டு வியர்வை சிந்தி உழைத்து என்ன பயன்? உழைப்பின் பெரும் பகுதியை மன்னனுக்கே வரியாக அழுது தீர்க்க வேண்டுமல்லவா? அறிஞர்களும் தமது அறிவுப் பணியைச் செய்யப் பயந்தார்கள். எதைப் போதிப்பது? அதர்ம வழியில் நடக்காதே, சுயநலம் பேணுதே, காமம் செய்யாதே, களவெடுக்காதே, பொய் சொல்லாதே என்றெல்லாம் அறநெறிகளைக் கற்றுக்கொடுக்கப் போஞல், அண்டிப் பிழைப்பவர்கள். அரசனையே மறைமுகமாகக் குத்திக் காட்டுவதாகக் கோள் சொல்லி ஆக்கினைக்குள்ளாக்குவார்கள். அதஞல் அவர்களும் வாளாவிருந்தனர்.

நாட்டில் பஞ்சம் தலைவிரித்தாடியது. பசி, பட்டினி, வறுமை, நோய், துன்பமே நாட்டின் செல்வங்களாயின. மக்கள் பெரும் துயரத்துக்குஆளாஞர்கள். ஆஞல் எத்தனை நாட்கள்தான் அவர்கள் அடிமை நுகத்தடியில் அல்லற்படுவார்கள்? எவ்வளவு காலந்தான் அவர்கள் அடக்குமுறைத் தாளாவார்கள்? எனவே அவர்கள் மெள்ள மெள்ள தம்மை மறைத்திருந்த அடக்குமுறைத் திரைகளை விலக்கிக் கொண்டு உணர்வு பெற்றெழுந்தார்கள்: ஒன்று, பத்து. நூருகக் கூடிக் கிளர்ச்சி செய்யத் தொடங்கிஞர்கள்.

## 2

அழகாபுரியைக் கைப்பற்றித் தன்னுடைய ஆளுகைக்குள் கொண்டுவரத் தருணம் பார்த்திருந்த அண்டை நாட்டுப் பகையரசன், இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தத் திட்டம் தீட்டிஞன். தன் படை பலத்தைப் பெருக்கிக் கொண்டு, அழகாபுரியைத் தாக்கிப் பிடிக்க ஆயத்தங்கள் செய்தான். சேதியறிந்த வில்லவன் கலக்கமுற்ருன். வாழ்நாள் முழுதும் சந்தேகத்திற் காலங் கழித்தானே தவிர, நாட்டு மக்களுக்கு நல்லதைச் செய்யவோ, பகை வந்துற்ற காலை நாட்டையும் மக்களையும் பாதுகாத்தற் பொருட்டுப் படை பலத்தைப் பெருக்கவோ அவன் நினைக்கவில்லை. தளபதியை உடனடியாக அழைத்து "போருக்கு ஆயத்தம் செய்!" என்று கட்டளையிட்டுவிட்டு நடுங்கிக் கொண்டிருந்தான் அவன். கோள் சொல்லி வயிறு வளர்ப்பதற்காக மன்னனைச் சுற்றிக் கும்மாளமடித்துக் கொண்டிருந்த சுயநலக் கூட்டம் போர் என்றதும் விழி பிதுங்கித் தடுமாறியது. பகை நாட்டுப் படைவீரர் எந்தக் கணத்தில் தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடோடி ஒருவனை இவன் வரவேற்பானோ என்று செய்வதறியாது திண்டாடினான் தலைவன்.

வில்லவனின் உள்ளம் உவகை பெற்றது. பெருமிதத்துடன் உப்பரிகையில் நின்று பொங்கிக் கொண்டிருந்தான் அவன். வீதி வழியே மக்கள் குதூகலம் பொங்க நடந்து சென்று கொண்டிருந்தார்கள். புதைந்து கிடந்த ஆசைகள், உணர்வுகள் நசுக்கப்படும் பொதுமக்களின் மனத்தைப் பாதிப்பதேது? யுத்த பயங்கரத்தின் பிடியிலே படியாதது போல வழமையான நடமாட்டம். அவர்களிடையே அவசரமாக நுழைந்த ஒரு வழிப்போக்கன், தன் பாட்டில் எதையோ சொல்லிக் கொண்டு வந்தான். பார்வைக்குப் பைத்தியக்காரன் போலத் தோற்றமளித்த அவன் தன் பாட்டில் சொல்லிக்கொண்டு வந்ததை யாரும் கவனிக்கவும் இல்லை, பொருட்படுத்தவுமில்லை. ஆனாலும் அரசன் பார்வையில் பட்டுவிட்டான். போர்ப் பீதியால் கலங்கிக் கொண்டிருந்த அரசன் வழிப்போக்கன் சொன்னதை உற்றுக் கேட்டான்.

"பல அறிவேன்: மணி அறிவேன்; மக்கள் குணம் தானறிவேன்."

திரும்பத் திரும்ப இதையே சொல்லிக்கொண்டு நடந்தான் வழிப்போக்கன். உடனே அரசன் ஏவலாளனை அழைத்து, தெருவில் செல்லும் அந்த வழிப்போக்கனைக் கூட்டி வரும்படி கட்டளையிட்டான். ஏவலாளன் வழிப்போக்கனை அழைத்து வந்தான். அரசன், அவனுடைய பூர்வோத்தரத்தைக் கேட்டறிந்த பின், வீதியிலே அவன் சொல்லிக்கொண்டு வந்த வார்த்தையின் தாற்பரியத்தை விசாரித்தான்.

"அரசே, குதிரைகளின் தரத்தையும், இரத்தினக்கல் முதலான மணிகளின் தரத்தையும், குறிப்பிட்ட மனிதர்களின் ஒழுக்கச் சங்கதிகளையும் அறிவேன். அறிந்து மதிப்பீடு செய்வேன்" என்று விளக்கம் கூறினான் வழிப்போக்கன்.


"அப்படியா? நீ என் அரண்மனையிலேயே தங்கியிரு. உன்னுடைய சேவை எனக்குப் பயன்படக்கூடும்" என்று கூறினான் வில்லவன். அருகிலிருந்த ஏவலாளனை நோக்கி, வழிப்போக்கனை அழைத்துச் சென்று, அரண்மனையில் ஓர் ஒதுக்குப்புறமான பகுதியில் தங்க வைத்து, நாள்தோறும் அவனுக்கு அளவாக அரிசி வழங்குமாறும் உத்தரவிட்டான்.

ஏவலாளன் வழிப்போக்கனை அழைத்துச் சென்றான். குதிரை லாயம் போன்ற சிறு அறை ஒன்றில் அவனைத் தங்க வைத்து, நாள்தோறும் அரிசியும் கொடுத்து வந்தான்.

## 3

ஞானானந்தன் என்ற அந்த வழிப்போக்கனுடைய உதவி, உடனடியாகவே அரசனுக்குத் தேவைப்பட்டது. பகைவரை எதிர்த்துப் போர் செய்வதற்கு மன்னனிடம் திறமையான குதிரைகள் இல்லாதிருந்தன. அதனால் அண்டை நாட்டுக்குச் சென்று திறம் மிகுந்த போர்க் குதிரைகளைத் தெரிவு செய்து கொண்டுவரும் பொறுப்பு ஞானானந்தனிடம் ஒப்படைக்கப்பட்டது. அவனும் அரசனின் கட்டளைப்படி ஒரு படைப் பிரிவின் துணையுடன் சென்று போருக்கு வேண்டிய ஆயிரம் குதிரைகள் வரை தெரிவு செய்து திரும்பினான்.

வில்லவனுடைய நாட்டுக்கும் பகைநாட்டுக்கும் இடையில் போர் நடந்த போது, ஞானானந்தன் தெரிவுசெய்த குதிரைகள்,



ஆசிரியர்: தேசத்தை நிர்வகிக்க வைத்து நற்புள்ளியை என்று ராமர் இருந்தார்.

மாணவி: ஏன் சேர், சேவையும் நாமனைத் நிர்வகிக்க வைத்து அவரது பாரத்தினை விரைந்து தை நிறுத்திருக்கலாமே!

படை வீரர்களின் தாக்குதலின் பகுதி பழக்கக் கால்கள் பதிப்பு பார்த்து சென்று காவலரும், வெற்றி பெறத் துணிந்து மேற்கு நோக்கிப் பகைவரைச் சாடின. தோற்று எதிரிப் படைகளை எதிர்த்தன. குதிரைகளின் சாமர்த்தியத்தால் வில்லவனின் வீரர்கள், வெற்றி எதிரிகளைப் புறமுதுகிட்டோடச் செய்தனர். வில்லவனுக்குப் பெருமகிழ்ச்சி. என்ன நடக்குமோ என்று நொந்துகொண்டிருந்த அவன், மனதில் தோன்றிய அதிர்ச்சியும், "வில்லவனின் வெல்வதற்கு ஒரு கவலையும் இல்லையோ?" என்று இறுமாப்புடன் அட்டகாசித்தான்.

உடனே பணியாளனை அழைத்தான். ஞானானந்தனுக்கு மேலும் ஒரு நாழி அரிசி வழங்கும்படி கட்டளையிட்டான்.

போர் முடிந்த போது தன் நாட்டுக் கலகம் செய்தவர்களைச் சாதுவாய்ப் படுத்த எண்ணி, தான் செய்த தவறுகளை மன்னித்து, சகலரும் நாட்டை விட்டு பாதுகாக்க வேண்டுமென்று பணியாக வேண்டுகோள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கே முழங்கு

சங்கு மார்க்

**எவர்சில்வர் பாத்திரங்கள்**

தொழிற்சாலையிலிருந்து

நேரடியாக தொழிற்சாலை

விலைக்கு மொத்தமாகவும்

சில்லறையாகவும் பெறுவதற்கு

# செல்லாசன்ஸ் சேல்ஸ் சென்ரர்

118, (199) கே. கே. எஸ். வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 22054

## சிரித்திரன் சந்தா விபரம்

1 வருட சந்தா — 42 - 00
6 மாத சந்தா — 21 - 00

தனிப் பிரதி வேண்டுவோர் 3-50 சத முத்திரை அனுப்பி பெற்று கொள்ளலாம்.

சந்தா பணத்தை காசோலையாகவோ காசுக் கட்டளையாகவோ எஸ். சிவஞானசுந்தரம் என்ற பெயருக்கு எழுதவும்

அனுப்ப வேண்டிய முகவரி

**சிரித்திரன்**

550 கே, கே, எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

தையல்கலைக்கு உயர்வு தரும் நூல்கள்

- முயல் மார்க் பருத்தி நூல்
- எவரஸ்ட் பொலியஸ்டர் நூல்
- ஸ்பீட்மாஸ் பொலியஸ்டர் நூல்
- "DAM" மார்க் எம்ரோய்டரி நூல்

நீண்டகாலம் உழைப்புக்கு வல்ல உறுதியான எமது தயாரிப்புக்களைப் பாவியுங்கள்.

**சாம்பியன் திரட் மனுபக்சரிங் கம்பனி**

கொழும்பு — 12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரித்திருந்தான் வில்லவன். மட்டுமல்ல, அவன் சொந்த கெளரவத்தை மறந்து, நாடு மக்களுக்கு நிவாரணமாக மதித்து, எதிரிப்படைகளுடன் நிராயுதபாணியாகச் சென்று நாடு பிழைக்க மன்னவன் காப்பாற்றினான், ஆனால் சமாதானமே உருவான மன்னனோ வெற்றியும் கண்டிருந்தான். பல உயிர்களை இழந்து பகைவருடன் போராடி வெற்றியிட்டிய வீரர்களுடனும் மக்களுடனும் சேர்ந்து வெற்றியாகக் கொண்டாடுவதற்குப் பதிலாக, அந்தப்புரத்தில், அரசியுடனேயே வெற்றியைக் கொண்டாட நாடினான். அவளை மகிழ்ச்சிப்படுத்த நினைக்கவேண்டியதாக விட உயர்ந்த பரிசு ஒன்றை வழங்க எண்ணினான். உடனேயே இரத்தின வியாபாரி ஒருவனை அழைப்பித்தான்.

4

விலையுயர்ந்த இரத்தினக் கற்களால் இழைக்கப் பெற்ற அழகிய சந்திர ஹாரம் ஒன்றைத் தானே தெரிவுசெய்து, அவ்வளவாலேயே அதை அரசியின் மார்பில் அணிவித்து அழகு பார்த்தான் அவன். பல நூதனமான வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த ஹாரத்தில் ஏதோ ஒரு குறைபாடு இருப்பதாகக் கொண்டது அரசிக்கு. ஹாரத்திலுள்ள சந்திரவடிவின் மத்தியில் பதிக்கப் பெற்றிருந்த இரத்தினக்கல்லில் ஏதோ புகை மூட்டம் போல மங்கலைக் கண்டதை அவதானித்த அரசி முகம் சுளித்தாள்.

ஆனாலும், எப்படியாவது அந்த இரத்தின மாலையை அவனுக்கு விற்று விடவேண்டும் என்று எண்ணிய வியாபாரி, அந்த மாலையைப் பற்றிய வர்ணனையைப் புகழ்ந்து பேசினான். "ஹாரத்தில், சந்திரவடிவின் மத்தியில் பதிக்கப் பெற்றிருப்பது மிக உயர்ந்த கோமேதகக்கல், விலை மதிக்க முடியாத இரத்தினம் அது! அரசிக்காக, அதனை நான் பத்தாயிரம் வராகன்களுக்குத் தருகிறேன்" என்று நயமாகப் பேரம் பேசினான் அவன்.

அரசி, கலகலவென்று சிரித்தாள். "வணிகரே, என்னை ஏமாற்ற வேண்டாம். இது கோமேதகக்கல். நீர் அதைச் சுட்டிக் காட்டும் தான் வாங்கப்போவது இல்லை!" என்று ஏளனமாகப் பேசினாள் அவள். இருவருக்கும் இடையே வாக்குவாதம் முற்றியது. அரசனோ தர்மசங்கடமடைந்தான். இதை எப்படித் தீர்ப்பது என்று யோசித்தவேளையில், அவனுக்கு ஞானகுருவின் நினைவு வந்தது. அவனை வரவழைத்தான்.

ஞானகுருவும் வெகு நிதானமாக அந்தச் சந்திரஹாரத்தைக் கையில் எடுத்துப் பார்த்தான். அதில் இழைக்கப் பெற்றிருந்த கற்களை ஒவ்வொன்றாகப் பரிசீலனை செய்தான். "சந்திரவடிவில் பதிக்கப் பெற்றுள்ள உண்மையான சந்திரகாந்தக் கல். வேறொன்றுமல்ல. ஆனால், அது விலையும்போது சற்று சாயம் போய்விட்டது. சொத்தைக் கல்!" என்று இப்படிப் பதிலளித்தான் அவன். வியாபாரி மறுத்தான். மீண்டும் வாக்குவாதம் தொடரவே, ஞானகுரு துணிந்து "வணிகரே கல்லை உடைத்துப் பார்க்க நீர் சம்மதம் தெரிவித்தால் நான் ஒரு நிரூபிப்பேன்!" என்று உறுதியாகக் கூறினான். மத்தியில் கல் உடைக்கப்பட்டது. கல்லின் உள்ளே அதன் விளிம்பில் சிறு பொத்தல் விழுந்திருப்பதைக் கண்டு அரசன் ஆச்சரியப்பட்டான்.

அரசன் பணியாளர்களை அனுப்பிட்டு ஞானகுருவுக்கு மேலும் ஒரு காப்புப்படி அள்ளி மாணிக்கம் வழங்கும்படி உத்தரவிட்டான்.

**தொடர் அடுத்த இதழில்**

[illegible stamp]



ரூபாய்; வீட்டை மாத்திரம் கட்டிமுடித்தால் போதாது. மூன்று பக்கத்தாலும் கட்ட வேண்டும். வேலிக்காணி; நிலம் சமபலனாக்கத்தைக் கட்டுவிக்கிறேன் நான் ஏற்றத்தைக் கட்டுறேன்.

---

(17-ம் பக்கத் தொடர்)

**யாழ்ப்பாணத்:....**

அந்தக் காலத்தில் சொந்த வேட்டிச் சொத்துக்களைத்தான் என்பது எல்லோருக்கும் தெரியும். அப்படிப் பட்டவர் பேசுகிற அந்த வார்த்தைகளைச் சொன்னவரும் கூட்டத்திலிருந்து அநேகருக்குத் தெரிந்தது. ஆறு ஆம் கொடுப்பதற்குள் அடுக்கிக்கொண்டனர்.

அந்த வயோதிபர் மட்டுமல்ல இன்று எங்களில் அநேக யாழ்ப்பாணத்தவர் இப்படி அடிக்கடி சொல்வதை நான் நன்கு கவனித்திருக்கிறேன். ஏன்? நான் கூடத்தான் அப்படிச் சொல்லியிருக்கிறேன். இப்படியே நாங்கள் ஒவ்வொரு யாழ்ப்பாணத்தவரும் 'நாங்கள் யாழ்ப்பாணத்தாரில்லை அடுத்தவர்கள்தான் இருக்கும் சொல்லியிருக்கும்' என்று நினைப்போமானால் எந்த யாழ்ப்பாணத்தவன் தான் இருப்பது?

'யாழ்ப்பாணத்தான்' என்று நாங்களே குறிப்பிட்டு குற்றம் சாட்டிப் பேசுவதும் நாங்களும் அந்தக் குற்றஞ்சாட்டப்படும் யாழ்ப்பாணத்தவரில் ஒருவர் தான் என்பதை எண்ணினாலே போதும். எங்கள் யாழ்ப்பாணத்தவர் திருந்திடுவார்? இந்த இடத்தில் சுவாமி விவேகானந்தர் சொன்ன அருள்மொழி ஒன்றை நினைவுபடுத்திக் கொள்வோம். "உன்னை நீயே திருத்திக் கொள். சமூகம் தானாகவே திருந்திவிடும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார் பவனி

ஸ்ரீ விக்கிரமராஜசிங்கன் கண்டியை ஆண்ட கடைசித்தமிழ் மன்னன். இவன் ஆங்கிலேயரின் ஆக்கிரமிப் பாலும், எட்டப்பர் கூட்டத்தினரின் காட்டிக்கொடுப் பாலும் தனது சிம்மாசனத்தில் இருந்து சிறை பிடிக்கப்பட்டான். இம் மன்னனைக் கைது செய்த ஆட்சியாளர், அவனைப் பிரிட்டிஷ் அதிகாரிகளுடன் அழைத்துச் சென்றனர்.

மலைமுகடுகளும், அரிய வழி நடையும் அமைந்திருந்த கண்டி ராச்சியத்தில் அன்று பிரயாண வசதி பெரிதாக இருக்கவில்லை. இம் மன்னனை வண்டியில் இருத்தி அதிகாரிகள் கைது செய்து கொண்டுபோனதாகவே கண்டியின் வரலாறு சொல்லுகின்றது.

வண்டி ஓட்டியோ கலாரசனை உள்ளவன். கவலை அவன் மனத்தில் குடி கொண்டது அவன் தனது உள்ளக்கிடக்கையை ஒரு சிங்களப்பாடலாக வெளியிட்டான்.

ஆங்கிலேய அதிகாரிகள் அவன் பாடிய பாடலைக் குறிப்பெடுத்து வைத்துக் கொண்டனர். பின்னொரு சமயம் ஆங்கிலேய அதிகாரி அந்தப் பாடலைச் சிங்களமும், ஆங்கிலமும் தெரிந்த ஒருவரிடம் வாசித்துக்காட்டினர்.

அவர் கொடுத்த விளக்கம் இதுதான்:-

''எமது மண் அந்நியர் ஆட்சியின் கீழ் அகப்படுகிறதே என்பது தான் அந்தக் கவிதையின் சாராம்சமாகும்;

''உண்மையை ஆராய இயலாதவன் குருடன்; ஆராய மனம் இல்லாதவன் மடையன்; அஞ்சுபவன் அடிமை''

'தலைராண்ட்' என்பவர் எண்பது வயதுக்கு மேற்பட்ட கிழவர், இவருக்குக் கால்கள் இரண்டும் வழங்காது. நெப்போலியனின் போர்களால் அழகும் வலிமையும் குறைந்து போய்ப் பிளவும் பிரச்சனையும் மிகுந்த ஐரோப்பாவைக் கட்டி எழுப்ப இவரின் ஆலோசனைகள் பெறப்பட்டன. இந்த ஆலோசனைகளின் அடிப்ப

● ●

● பெண் கறையான்: நீண்ட காலம் புத்தகம் புசித்து! புத்தகம் புசிக்க ஆசையாயிருக்கே!

□ ஆண் கறையான்: இப்போ வீடுகளில் புத்தகம் இல்லையே... கசட்தான் குப்பையாகக் குவிந்திருக்கு

ஜோக்கிறட்டீஸ்

## திக்கவயல்

டையில்தான் முக்கால் நூற்றாண்டுக்காலம் ஐரோப்பாவில் சமாதானம் நிலவி வந்தது. எமது நாட்டின் ஜனாதிபதிக்கும் வயது 77ற்குமேல்! இலங்கையின் இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு வானத்திலும் நிலத்திலும் 'ராஜீவ்' வுடன் பேசிவிட்டுத் திரும்பியுள்ளார் எமது ஜனாதிபதி. அவர் இன்னொரு 'தலைராண்ட்' ஆவாரா?

● ●

எதிரி எதைச் சொன்னாலும் எதிர் என்பது ஓர் அரசியல் கோட்பாடு ஆங்கிலேயனுக்கு எதைச் சொன்னாலும் விளங்காது; அவனை எதிர்த்து நில் என்பது அயரிஸ் வீரர்களின் போராட்ட மந்திரம். இப்பேர்ப்பட்ட தாரக மந்திரங்கள் இலங்கைக்கு வெளியில்தான் செல்வாக்குப் பெற்றன எனச் சொல்லமுடியாது.

இலங்கையின் இனப்பிரச்சனைக்கு அரசு எடுக்கும் எந்த முடிவையும்தான் எதிர்க்கப் போவதாகவும் அது பெரும்பான்மை மக்களின் சர்வசன வாக்கெடுப்பிற்கு விடப்பட வேண்டுமென்றும் திருமதி ஸ்ரீமாவோ அம்மையார் கூறியுள்ளது 'நந்திபோல் வழிமறிப்பார் அப்பா' என்ற தமிழ்ப் பழமொழியையே ஞாபகப்படுத்துகின்றது. தரப்படுத்தல் முறையைக் கொண்டுவரவும் ஐந்து வருட அரியாசனத்தை ஏழு வருடம் ஆக்கியும் ஆட்சி புரிந்த அம்மையார் அன்று சர்வசன வாக்கெடுப்பிற்கு யாரிடமும் சென்றாரா? உஸ்... மாறி மாறி வரும் காலம் அதற்குப்போடு தாளம்.



ஒருவர்: இப்பொழுது நகரத்தில் எரிபொருளுக்கும் தட்டுப்பாடு, தண்ணீருக்கும் தட்டுப்பாடு.

மற்றவர்: நகர பரிபாலனம் எம்மை நளமகாராஜன் மாதிரி என்று நினைக்கிறது போல... தண்ணீர் நெருப்பில்லாமல் சமைப்பதற்கு:

□ □

பாண்டுங் மகாநாடுபற்றிய ஞாபகார்த்தக் கட்டுரைகள் பல பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன. சிரித்திரன் வாசகர்களும் சில சீரியஸான விஷயங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிமை வேண்டும் என்பதற்காக நாளும் சற்றும் பின்வாங்கவில்லை போலும்! 1959-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் சகாரோவு தலைமையில் புதிய ஆபிரிக்க நாடுகளின் விடுதலைக்காகக் கூட்டப்பட்ட இந்த மகாநாட்டைப் பற்றி நாமும் நினைவு கூருவது நன்று.


ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் சுதந்திரப் போராட்டம் ரஷ்யப் புரட்சியில் இருந்தோ, சீனப் புரட்சியில் இருந்தோ தொடங்கவில்லை எனக் குறிப்பிட்ட அவர் வேறு போராட்ட வீரர்களை ஆய்ந்து அமெரிக்கப் புரட்சியே எனக் குறிப்பிட்டார். தனது கருத்துக்கு ஆதாரமாக அவர் புத்தக மேற்கோள்களையோ, பேராசிரியர்களையோ அழைக்கவில்லை. அமெரிக்கக் கவிஞரான லோங் பெலோவின் (Long Fellow) பாடல்வரிகளில் தம் கருத்துச் சுதந்திரம் இருந்த அடையாளங்கள் மறைந்து எடுத்துக் கூறினார்.

அமெரிக்கப் புரட்சியின் மகா ஆயுதங்கள் இம்மகாநாட்டப்பட்டது எனச் சொன்னவர் இறுதி அந்தப் புரட்சியின் முதல் துப்பாக்கி வெடி உலகு எங்கும் கேட்டது எனக் கவிதை வரியைப் பேசினார். இக்கட்டத்தில் கலந்து கொண்ட இலங்கைப் பிரதிநிதி சேர் ஜோன் கொத்தலாவலை குடியேற்ற ஆட்சியை நாம் எதிர்ப்பதாக இருந்தால் சோவியத் யூனியனையும் கண்டிக்க வேண்டுமென்றார். பழையவை பற்றுக்கு ... உங்களுக்கு எப்படியோ?

# சிரிக்கிங்க

சொற்பிரசங்கவாதி: அரசியல் வேலைசெய்வதைவிட்டு ஆண்டியாக ஏன் மடத்தில் வந்திருக்கிறீர்கள்?

ஆண்டிகள்: கொம்பியூட்டர் வந்தபிறகு ஆபீசில் எமக்கு எல்லா வேலை இருக்கு.




டாக்டர்! இந்த இருதயநோய் அதிர்ச்சியில்தான் ஏற்பட்டது என்ன அதிர்ச்சி அது.

குடிகாரன்: நான் ஜெயிலில் நின்று வாங்கிவந்த சாராயப்போத்தல் விழுந்து உடைந்துவிட்டது!

நோயாளன்: அப்பா ஆபீஸால் வந்ததும் என் நிலைக்கிறார்.

தாய்: அவர் நித்திரையால் எழும்ப மாட்டார்.

— அமிர்தராம்



ஆசிரியர்: பாவெளத் சிலந்தியும் கொண்ட காதல் ஒருதலைப் பட்சக் காதல்.


மாணவன்: இல்லை சேர் பத்துத் தலைப்பட்சக் காதல்;

— அமிர்தராம்



ஜோசியக்காரன்: ஆதிரையா? நீர் வருகிறவா? ஆதிரை உலக ஒரு தோட்டக்காரன்தான் மாப்பிள்ளையாய் வருவான்.

விவசாய ஆசிரியை: நீர் ஒரு ஜோசியக்காரன் ஆதிரையை கைமையக்காரரை இருந்த ஒரு வக்கீல் தான் மாப்பிள்ளையாய் வருவான்.



தாய்: என்னடா கல்யாணப் பாடத்திலும் பின்னிலாக்கா எடுத்திருக்கிறாய்?

மகன்: 211

தகப்பன்: சினி சினிமாவில் எப்பொழுதும் படம் பார்ப்பவருக்கு எப்படி "மக்கியலு" மார்க்ஸ் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❊ சிரிக்க ❊ சிந்திக்க

**சிரித்திரன்**

பருத்தித்துறை விற்பனையாளர்:

**கந்தையா ஸ்ரோர்ஸ்**

தும்பளை வீதி: பருத்தித்துறை

பாடசாலை உபகரணங்கள், றபர் ஸ்டாம்புகள் ஓடருக்குச் செய்து கொடுக்கப்படும்.




ஒருவர்: நாம் ஏன் பால் குடிக்கும் பழக்கத்திற்கு அடிமையாகாது சாராயம் குடிக்கும் பழக்கத்திற்கு அடிமையாகிறோம்?

மற்றவர்; கெட்டவன் தானே மற்றவனை அடிமையாக வைத்திருப்பான்.


இல்லத்ரசிகளே!

உங்கள் மிளகாய் மற்றும் தானிய வகைகளை சுத்தமாகவும் மனநிறைவாகவும் அரைத்துக்கொள்ள

**நளினி கிறைண்டிங் மில்**

கனகசபை அவனியு, வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்

**நியூ ஆனந்தா ஜுவெல்லர்ஸ்**
**NEW ANANTHA JEWELLERS**

ஆடர் நகைகள் 22 கரட் தங்கத்தில் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

**Orders Executed Promptly**

# நியூ ஆனந்தா ஜுவெல்லர்ஸ்

185, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

185, Kasthuriar Road,
Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளாக வாழ்வில்

— நற்பிட்டிமுனை பளீல் —

அது வளாகத்தில் படித்துக் கொண்டிருந்த வசந்த காலம். காலை 8 - 00 மணியிலிருந்து, மாலை 4 - 30 மணி வரை நான்கு பாடங்களின் "விரிவுரைகள்" ஏனைய நேரங்களில் "லெக்சர்" சொல்லும் இடமில்லை. அதனால் கொஞ்சம் நிம்மதி. நள்ளிரவு 2-மணி வரை படித்து விட்டு அதன் பின் வளாகத்தைச் சூழவுள்ள தென்னை மரங்களிலிருந்து "இளநீர்" பறித்துக் குடித்தால் - அன்று வெளிக்குப் போனதைப் போல் திருப்தி.


அன்றும், வழமை போல் சம்பவ தோட்டப்பக்கம் சென்றோம். இந்த 7 - 8 பேரும்தான் "உதைச்" சென்றவர்கள். "காவலாளி" எங்கு சென்றுவிட்டான் தெரியவில்லை. ஆனால் ஒளித்துக் கொண்டிருப்பான் என்பது மட்டும் நிச்சயமாய்த் தெரியும்.

மரத்தில் ஏறுவதில் (இலங்கையில் நடப்பதில்) கபூர் தான் கெட்டிக்காரன். ஆனால், அன்றைய நாளில் அவன் தான் அகப்பட்டான். 'இடுகிடு' என்று ஏற்படும் மூளை இல்லை; அட நாடு முழுவதிலும் இலங்கையில் தான் உள்ளென்றாலும் ஒத்துவிடுவான்; குழந்தைச் சுபாவம்; "மொடல்" பிடிக்கும் என்பதால், செல்லமாக — "மொடன்" பிடிக்கும் என்றே எல்லோரும் அவனை அழைப்பர்.

அதனால் கேட்டவுடனே, மரத்தில் ஏற ஒத்துக் கொண்டான். இளநீர் விழும்போது சப்தமேற்படக் கூடாது என்பதற்காக, தென்னையின் கீழ் — ஒரு "பெட்ஷீட்டை" 4 பேர் தாங்கிப் பிடித்திருப்பது எங்கள் நடைமுறை. "ஏற்றிச்சென்ற இளநீர்" — என்றுதான் பருவம், இளநீரை விட முக்கியமானது அதன் தென்னையை விட இனியது. அதனால் இதை ஒன்றுமே செய்ய முடியாது. மூட்டுக்காய் விழுந்தால் 'பெட்ஷீட்' ஒரு பாடு "அரோ கரா" தான்.

எப்போதுமென்றும் தெரியாத ஏதோ, நாங்கள் 4 பேர் "காவலாளி" வருவதை அவதானித்தபடி ஆரத்தில் நின்று இருந்தோம் சப்தப்படாமல் இருந்ததிலிருந்தே - கபூர் மரத்தின் ஏறிவிட்டான் - என்பதைக் கணிக்கக் கூடியதாயிருந்தது. காவலாளி வருவதை மிக கண்ணிப்பாய் அவதானித்துக் கொண்டிருந்தோம்.

சற்று நேரத்தின் பின், தென்னைமரப் பக்கம் - "டொம்..." என்றொரு சத்தம் கேட்டது. கூடவே "பா... பா" வென, பெட்ஷீட் பிடிப்போர் சத்தமும் கேட்டது. "...பச்சைகள் இப்போ விழுந்தது மூட்டுக்காய் தான்...



□ இன்று உலகில் மாமன்னர்கள் இல்லையே!
● யார் சொன்னது மா கறுப்பு விலைக்கு விற்பவர்கள் மாமன்னர்களே!

ஜோக்கிரட்டீஸ்

என்று பெட்ஷீட் நிச்சயமாகக் கிழிந்து போச்சு ..." என்றும் கூட நின்றவன்.

அதைத் தொடர்ந்து, தென்னைமரப்பக்கம். "என்னையம்மா என்றம்மா..." — என மெல்ல மெல்ல அனுங்கும் சத்தம் கேட்கத் தொடங்கியது. அந்த நேரப்பொழுதுகளில், — விழுந்தது மூட்டுக்காயல்ல, — கபூர் தான்...!

பிறப்புத்தான் என்றாலும் — சடப்' அவன்தானத்திற்காக வாயை இறுக்கிப் பொத்திக் கொண்டோம்; யாவரும் கூட நின்ற 'ஏதன்' அடுத்தவனைக் கிள்ள அடக்கமுடியாமல் கொல்லெனச் சிரிக்கத்தொடங்கினோம்.

## அடி!
## உதை!
## அப்பப்பா!

ஒரு நாள் நானும் நண்பரும் வழக்கம் போல் வேலை செய்து கொண்டிருந்தோம். அச்சிடப்பட்ட போஸ்டர்கள் காய்ந்து கொண்டிருந்தன. அவை காய்வதற்கு அரைமணி நேரமாவது எடுக்கும். போஸ்டர்கள் பல வர்ணங்களில் மிகவும் கவர்ச்சியாக இருந்தது. அப்போது அங்கே ஒரு கிழவர் வந்தார். வயது 60 ஐத் தாண்டி இருக்கும் ஆனால் கட்டு மஸ்தான உடல் இருந்தது. உடனே எந்த கிழவரை போஸ்டர்களின் கவர்ச்சி மயக்கி இருக்க வேண்டும். அதனால் அவர் தாமும் எங்களு பக்கமாகத் திரும்பிக் கொண்டு நாம் ஒழுங்காக அடுக்கி வைத்திருந்த போஸ்டர்களை கையிலெடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுப்பதும், மேசையின் கீழே வைப்பதும் அந்தப் பக்கம் நகர்த்துவதும், இந்தப் பக்கம் நகர்த்து வதுமாக செய்து கொண்டிருந்தார். அவருடைய அந்த வேலையால் போஸ்டர்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிப் பழுதாகி விடும் என்பதால் கிழவரை எச்சரிக்க விரும்பிய என் நண்பர் ''அப்பு, நாய் பார்க்கிற வேலையைக் கழுதை பார்க்கக் கூடாது, நீங்கள் வெளியில் போங்கள்'' என்று கூறினார் நான் வேலையில் கவனமாக இருந்ததால் கிழவரின் முகத்தைப் பார்க்கவில்லை பார்த்திருந்தால் அந்த வசனம் கிழவருக்குப் பிடிக்கவில்லை என்பதை யூகித்திருப்பேன்.

ஆனால் நானோ வேலையில் கவனத்தைச் செலுத்தியபடியே ''ஏன்டா! அப்படியானால் அந்த ஆளைக் கழுதை என்று சொல்கிறாய்? உன்னுடைய வயதென்ன? அந்த ஆளின் வயதென்ன ஒரு மரியாதை வேண்டாமா?'' என்று வேடிக்கைக்காகச் சொன்னேன்; அவ்வளவுதான்! கிழவர் என் மேல் பாய்ந்தார். என் கையில் இருந்த அச்சு சாதனம் பறந்த விதம் M. G. R இன் சினிமாப் படங்களை ஞாபகமூட்டியது. வலது காதில் ஒன்று விழுந்தது. இடது காதில் இரைச்சல்! கேட்டது. நான் போய் ஒரு மூலையில் விழுந்தேன் என் முகத்தில் மள மளவென்று நான்கு குத்துகள் விழுந்தன. சும்மா சொல்லக் கூடாது ஆள் வயதில் முதியவராக இருந்தாலும் அடி இளமையாக இருந்தது. முகத்தில் விழுந்த குத்தினால் எனக்குக் கண்ணைத் திறந்து பார்ப்பதில் சிரமமேற்பட்டது; கண்ணை மெதுவாக வெட்டி வெட்டி விழித்தபோது, அறையின் மற்றொரு மூலையில். என் நண்பர் மேல் கிழவர் கையாலும் காலாலும் ஆக்ரோசமாக துள்ளித் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தார்; அதைப் பார்த்த போது கிழவர் இளவயதில் கராட்டே, யூடோ, சிலம்படி விளையாட்டுக்களைப் பழகி இருப்பார் போலத் தோன்றியது. விடயம் தெரியாமல் மாட்டிக் கொண்டு விட்டோம், என் நண்பருக்குத்தான் செம்மையான உதை, சிறிது நேரத்தில் கிழவர் வாயில் வந்தபடியெல்லாம் பேசிக் கொண்டு வெளியே போய் விட்டார். இப்படி நடக்குமென்று நாமிருவருமே எதிர் பாராததால், பிரமிப்பிலிருந்து விடுபட சிறிது நேரம் எடுத்தது. எங்கே கிழவர் எனக்குத் தந்தது போதாதென்று நண்பரும் எழும்பித் தரப்போகிறாரோ என்று எனக்குள் ஒரே பயம். நல்ல வேளையாக அப்படி எதுவும் நடக்கவில்லை. பின் நானே முதலில் எழுந்து மூலைக்கொன்றாக பறந்திருந்த அச்சு சாதனங்களை எடுத்து வேலையைத் தொடங்கினேன். அப்புறம் நண்பரும் எழுந்து வேலையைத் தொடங்கிய போதிலும் அன்று முழுவதும் நண்பர் முகத்தை 'உம்' மென்று வைத்துக் கொண்டார் இருவரும் எதுவுமே பேசவில்லை. ஆனால் மறுநாள் இருவரும் சந்தித்துக் கொண்டபோது எழுந்த சிரிப்படங்க பல மணி நேரம் எடுத்தது. அந்தச் சம்பவத்தின் பின் இப்படியான வசனங்களை எங்காவது பாவிக்க வேண்டி ஏற்பட்டால் முதலில் ஓடுவதற்கு வசதி இருக்கிறதா? என்பதைப் பார்த்துக் கொள்வேன்;

ஆழம் பார்த்து காலைவிடு என்பார்கள். இந்தச் சம்பவத்தின் பின் நான் ஆளை அறிந்து கதைவிடக் கற்றுக்கொண்டேன்.





☐ நம்ம நாட்டில் இரண்டு லட்சம் மனநோயாளிகள் இருக்கிறார்களாமே!

★ ஆமாங்க... இந்த நாக்கு ஹாஸ்பிடல்களிலும் அவங்க ரொம்ப நல்லவனுங்க.

☐ என்னப்பா... ஒரு புதுமாதிரி யோகப்பியாசம் செய்கிறாய்

● இல்லை மினிப...ஸில் இப்படி வளைந்து நெளிந்து நின்றதில் உடல் இப்படிச் சுழுக்கிப் போட்டுது.

பப்பண்ணா

பிரம்மா: நாரதரே... விண்ணுலகில் ஒரு விபரீத சத்தம் கேட்டதே!

நாரதர்: சம்போ மகாதேவா... மனிதனைச் சிந்திக்கத் தெரிந்தவனாகப் படைத்தீர்களே: அந்தச் சிந்தனையின் சங்கீதம் கேட்டது!

பிரம்மா: நாரதர் பேசுவதொன்றும் புரியவில்லையே!

நாரதர்: சிந்தனையால் விமானம் செய்து விண்ணில் உயர விட்டான் சிந்தனையால் அதை வெடிக்கவும் வைக்கிறான்.

அதிமதுரம்




☐ உனக்குப் பொருத்தமான பெண் தேடி அலைந்தாயே கிடைச்சிட்டுதா?

● கிடைச்சிட்டுது .. இப்போ மனைவியின் சாரிக்கு பொருத்தமான பிளவுஸ் துணி தேடி அலைகிறேன்.

அதிமதுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேயம் நயந்தவை

தத்துவார்த்த மான கதைகள் அருகிவருகின்ற நேரத்திலே (ஏன், இல்லை என்று கூட சொல்லலாம்) சித்திரா "கனவே இருக்கும் தனி" என்ற சிறுகதையை பிரசுரிக்கவன் மூலம் அந்தக் குறையையும் நிவர்த்தி செய்து விட்டாள்.

போலி வேடம், போலிப்பக்தி பட்டு ஆடியைத்தரித்து சாட்டை அடி கொடுத்த கதாசிரியர் ஆன்மசக்தியோடு இருக்கிற ஒருவன் வெளிப்பார்வைக்கு எந்த நிலையில் இருந்தாலும் கடவுள் அருளையோ, அடியார்களின் அருளையோ, மிக சுலபமாகப் பெற்று விடலாம் என்பதை இனிய பேச்சுத் தமிழில் பசுமரத் தாணிபோல் எளிதாக புரியவைத் திருக்கின்றார்.

கதையில் ஓர் இடத்திலே, சிற்பானந்த சுவாமிகள்:-

மெய்ஞானத்தைச் சொல்லக் கூச்சம் எதற்கு. அப்படியென்றால், சொன்னால் கூசாய் படிப்பாக காசி யாத்திரை தான் நீ செய்கிறாய் என்று அர்த்தமா?

சாந்தன்: மௌனம், பேசாமலே யான மௌனம், இந்த இடத்திலே சாந்தன் மட்டும் மௌனமாக விடவில்லை. வாசகர்களாகிய நாமுமே மௌனமாகிறோம், ஆமாம், ஒருவகை விளக்கம் புரிந்து கொண்ட மௌனம்.

இதே போன்று மேலும் பல ஆழ்ந்த, அறிவுள்ள கதைகளை அன்பர் ராஜமகேந்திரன் இலக்கிய உலகிற்கு வழங்குவார் என்ற எமது நம்பிக்கையை நிச்சயம் பாதுகாப்பார் என்றே நம்புகிறேன்.

கருமணி
கோப்பாய்

★ ★

சென்ற இதழ் நீலன் கண்ணோட்டத்தில் எமது இன்றைய நிலையை தெளிவாக தெள் அமுது நடையில் ஆசிரியர் படம் பிடித்துக்காட்டிவிட்டார்.

"தமிழனுக்குக் கடல் அலைக்கும் ஒருதலை எழுத்து—விதியும் அதேபோல் தலையெழுத்து" என்று கூறியது எவ்வளவு உண்மை.

பி. சிவராஜன்
புலோ

★ ★

Mrs. டாமோதரன் அந்நிய நாட்டு வாசம் முடிந்து வந்திருக்கிறார். நீண்டகாலம் சந்திக்க முடியாமலிருந்தோமே! அவரின் தரிசன விருந்தை நாடும் அபிமானிகளில்

க. சிவகேந்திரன்
மட்டுநகர்

★ ★

நான் இதழ் முடிய படிவ Orange juice போன்று சத்தாகவும் சுவையாகவும் இருந்தது.

சி. ஞானம்
உடுப்பிட்டி

★ ★

சிவா பொன்னுத்துரையின், சம்பவங்களை படித்து நகைத்தேன். அது நகைத்தேறுகிலே இருந்தது.

க. சுரேந்திரன்
புலோலி

★ ★

மருதுமாரின் கதிர்கள் சில தேன் கொட்டுவதுபோல் வரிக்கிறது. சில திருப்பதி வட்டுப் போல் தித்திக்கிறது. மருதுவின் மேதுனின் வல்லமையை வாழ்த்தாமல் இருக்கமுடியவில்லை.

செல்வி உஷா முத்துராசா

★ ★


மௌனியின் "வயற் பரம்பும், ஒரு கோவண நாளும்" என்ற கவிதை எண்மனதில் ஒரு கவிதை நிறைவைத் தந்தது. அது எங்கள் ஆக்கம் வழமைபோல் இலக்கிய இன்பமாக இருந்தது.

செல்வி தவநேசனி கோபால்
ரத்தினம்
சாவகச்சேரி.

★ ★

சபியின் திரை அரங்கம், அதே ஆண்டு மலர் விமர்சனம், அனந்து எழுதுவது, ராஜமகேந்திரனின் சிறுகதை — அத்தனையும் கனம் தரிசனமாக இருந்தன.

சி. மங்கைவடிவேல்
இணுவில்



மிஸ்ஸிஸ்: நான் இப்போ ரொம்ப மெலிந்துபோனேன்
மிஸ்டர்: ஏன்!
மிஸ்ஸிஸ்: பெற்றோல் தட்டுப் பாட்டால் தான் இப்போ காரில் உலாபோவதில்லையே!

ஒருவர்: அரசியல் தத்துவப் புஸ்தகங்கள் எழுதுபவர் இப்போ உன்னை என்ன கேட்டனர்.
மற்றவர்: நாட்டு அரசியல் நிலை எப்படியிருக்கு என்று கேட்டார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரமி கூந்தல் தைலம்

கூந்தலை அடர்த்தியாக கருமை யுடன் நீளமாக வளரச் செய் யும், அகால நரையை நீக்கி கண்களுக்கும் மூளைக்கும் குளிர்ச் சியையும் ஞாபகசக்தியையும் கவர்ச்சியான தோற்றத்தையும் அளிக்கவல்லது.

இருபாலாரும் உபயோகிக்க உகந்தது

## பிரமி கூந்தல் தைலம்

விநியோகத்தர்கள்

## எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

*53(191)கே. கே. எஸ் வீதி* — *160 செட்டியார் தெரு*

தொலைபேசி எண்

*யாழ்ப்பாணம்.* 21541 — *கொழும்பு — 11.* 35825

## அழகான ஆடைகளுக்கோர் அழகாபுரி

வானவில் வர்ணங்களில்
வடித்தெடுத்த
அழகு கொளிக்கும் ஆடைகள்

* பெனாரிஸ் பட்டு
* தஞ்சூர் பட்டு
* காஞ்சிபுரம் பட்டு
* ஆரணியம் பட்டு
* தர்மபுரம் பட்டு

அத்தனையும் உங்கள் சிந்தனையைக் கவரும் கலை நெசவுகள்.

இன்றே விஜயம் செய்யுங்கள்.

# சிவகணேசன் ஸ்ரோர்ஸ்

41, பெரிய கடை
யாழ்ப்பாணம்.

☎ 23169


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹோம் பிஞன்ஸ் லிமிடெட்.

463, காலி வீதி,
கொழும்பு - 3
போன்: 589190

82, கன்ஞதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
போ: 24310

## மக்கள் விரும்பும் பிஞன்ஸ் கொம்பனி

வீட்டுப் பொருட்கள் — கடன் கொடுப்பனவுகாரர்,
வெளிநாட்டு ஏற்றுமதி இறக்குமதியாளர்,
பட விநியோகஸ்தர்கள்,
உல்லாச பஸ் சேவையாளர்,
காணி நில முதலீட்டாளர்கள்,
கட்டிட கொந்தராத்துக்காரர்,
புடவை விநியோகஸ்தர்,
அனைவருக்கும் சேவை செய்கிறது

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகவும்

வளர்ந்து வருவது.

## ஹோம் பிஞன்ஸ் லிமிடெட்

கிளை: இல. 82, கன்ஞதிட்டி.
யாழ்ப்பாணம்,
போன்: 24310

தலைமையகம்:
ஹோம் பிஞன்ஸ் லிமிடெட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதனின் சிறந்த இரை கீரை

- முருங்கைக் கீரை சலரோகத்தைச் சுகப்படுத்தும்.
- சித்திரை வைகாசி அறுபது நாளும் தொடர்ந்து பொன்னுங்கானிக்கீரை சாப்பிடுவதால் பகலிலே நட்சத்திரத்தைப் பார்க்கலாம் என்பார்கள்.
- கருவுற்ற பெண்கள் தொடர்ந்து ஆறு மாதம் பசளைக்கீரை சாப்பிட்டு வந்தால் பிரசவம் சுலபமாயிருக்கும்.

கீரை பயிரிட்டு உயிரைக் காப்போம்!

சுயவிலாசமிட்ட -/60 சதம் முத்திரை ஒட்டிய பெரிய என்வலப்பை அனுப்பி ஒரு பைக்கற் கீரைவிதையை இலகுவாகப் பெற்றுக் கொள்ளலாம்.

மில்க்வைற் யாழ்ப்பாணம்.

❋ உள்நாட்டு மூலப் பொருட்களை உற்பத்திக்கு எடுப்போம்.
❋ உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கு ஆதரவு கொடுப்போம்.




மாணவிகளே!
உங்கள் சீருடையை சலவை செய்ய மில்க்வைற் சலவைப் பவுடரைப் பாவியுங்கள்.
துரித கதியில் தூய்மையான வெண்மை தரும்.

## மில்க்வைற் சலவைப் பவுடரைப் பாவியுங்கள்

தயாரிப்பாளர்:

# மில்க்வைற் தொழிலகம்

### யாழ்ப்பாணம்.

த. பெ. 77 தொலை 23233

மாணவமணிகளுக்கு மகிழ்ச்சிகரமான செய்தி

உங்கள் சீருடைகளை வெண்மையாக்கும் எங்கள் மில்க்வைற் நீலக்கட்டி மேலுறைகள் 200 சேர்த்துத் தந்தால் உங்களுக்கு நீலநிறம் பொருந்திய தடித்த துணியிலான புத்தகப்பை (SCHOOL BAG) ஒன்று தருவோம்.

பிரதம தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பெற்றது. பதிவு இல Q. J. 35 (N) 83
● 550, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் திரு. சிவஞானசுந்தரம் அவர்களால் 550, கே. கே. எஸ். வீதியில் உள்ள சிரித்திரன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org